December 1911. Registered No. M. 925.

# செந்தமிழ்ச்செல்வம்

திரிசிரபுரத்து மாதந்தோறும் வெளிவரும்.

ஒரு தமிழ்ப் பத்திரிகை.

சேல்வத்துட் செல்வம் சேவிச்சேல்வ மச்சேல்வம்
சேல்வத்து ளெல்லாந் தலை.

தொகுதி 1.] விரோதிகிருது-வூ மார்கழி-மீ 1-உ [பகுதி-9.

உள்ளுறை.


| | பக்கம் |
|---|---|
| வாழ்த்துப்பாக்கள். | 193 |
| நமது மாட்சிமைதங்கிய 5-வது ஜார்ஜ் சக்கரவர்த்தி | 195 |
| அகத்தியர். | 196 |
| ஓர் அற்புதக் கனவு. | 199 |
| திருப்பெருந்துறை விளக்கம் | 201 |
| மனோகரன். | 205 |
| சன்மார்க்ககிர்த்தியங்கள். | 209 |
| ஓர் ஆகாயப் பிரயாணி. | 212 |
| பெற்றோர் பீ நிலை நீக்கிய பெண்மணி. | 214 |
| விரோதக்கூற்று. | 216 |
| சமாச்சாரக்குறிப்புகள். | |


பத்திராதிபர்:— பண்டிதர், அமிர்தம். சுந்தரநாதபிள்ளை.
திரிசிரபுரம்.

வருஷசந்தா ரூ. 1. } தபாற்கூலி அணா. 4. }
Copy Right Registered.
{ வெளிநாட்டுக்கு ரூ. 2. { தனி சஞ்சிகை அணா. 2.

லக்ஷ்மி விலாஸ் பிரஸ், திருச்சி.

விலாசம் பெற்ற விதேசம் பக்கம் ஒன்று தக ரூ. 1—8—0.

மாதிரிப் பத்திரிகை 0—3—0.

# செந்தமிழ்ச்செல்வம்

## ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி-1.] விரோதிகிருது௵ மார்கழி-மீ 1-௳ [பகுதி-9


## மகாகனந் தங்கிய நமது காருண்ய சக்கரவர்த்தி ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் பெருமான் இந்தியாவிற் கெழுந்தருளி இந்திய சக்கிரவர்த்தியாய் முடிசூடுங் காலத்து வாழ்த்திய

# வாழ்த்துப் பாக்கள்.



### ஆசிரியப்பா.

வாழிய நலனே! வாழிய நலனே!
எம்மவர் மகிழ வினிது புரக்கும்
உலகு காவலன் ஒப்பிலாக் குணத்தோன்
ஓங்கிய செங்கோல் தாங்கியவலத்தான்
மன்னுயி ரனைத்துந் தன்னுயி ரொப்ப
அளித்தருள் மன்னவன் களிப்பொடு கலையெலாங்
கற்றதீரன் காமனே ரழகன்
செங்கண்மா லென்ன வங்கண்மா ஞாலம்
எண்ணித் துதிக்குந் தண்ணிழற் கோமான்
ஐந்தா வதுஜார்ஜ் இந்தமா நிலத்தில்
வாழி! வாழி! வளர்மதி போல
புகழ்மிக வளரப் புவிமிகக் களிக்க
வேந்தர் வேந்தன் விளங்கிட வாழி!
இன்னவன் காதலி பொன்னவ ளென்னும்
அன்னை மேரி யம்மையும் வாழி!
உலகந் தழைக்க உலகஞ் சிறக்க
கலகந் தேயக் களிப்பே யோங்க
மன்னவன் திருக்குல மன்னவே
வாழி! வாழி! வளம்பெற மாதோ.

## எண்சீர் விருத்தம்.

வாழியென வுலகமெலாம் வகுத்துக் கூற
வந்துநமைப் புரக்கின்ற மன்னன் ஜார்ஜு
ஊழியெல்லைக் கப்பாலு முயர்வு குன்றா
வொளியுடனே குலங்குலவ வுவந்து வாழி
வாழியவர் மகிழவரு மனைவி மேரி
வனப்பமைந்த புத்திரபௌத் திரர்கள் வாழி
வாழியவர் செங்கோலு மாண்புந் தூய்ய
வளத்துடனே வீரமெல்லாம் வாழி மன்றே.

## அறுசீர் விருத்தம்.

நமைமுன்னந் தண்ணிழலாற் புரந்தவிக்டோ
ரியாவென்னும் நலமா ரன்னை
யமைவுடனே யாண்டபொழு தும்மேழாம்
எட்வர்டே யந்தக் கோலைத்
தமைநிகரா ரெவருமெனத் தாங்கியகா
லத்துமிந்தத் தன்மை யுண்டோ
நமைமதித்து நமதிந்தியா நகர்வந்து
முடிபூண்ட நலமென் சொல்வாம்.

## வேறு.

பரதநா டென்று போற்றும் பண்புயர் நமது நாட்டில்
சரதமா வந்து மௌலி தரித்தருள் ஜார்ஜு மன்னன்
விரதமார் மனைவி யாகும் விளங்கிழை மேரியோடும்
கரதலா வமுதம் போலுங் காதல ரோடும் வாழி.

## கட்டளைக்கலித்துறை.

வாழி ஜியார்ஜு பெருமானன் மேரி மனைவியுடன்
வாழி யுலக மழையோடு வாழி மறையனைத்தும்
வாழி குடிகள் செழித்தோங்கி வாழி மனமகிழ்ச்சி
வாழி கடவுட் டிருவா லயங்கள் வதியமன்றே.

## வெண்பா.

வாழியெங்கள் ஐந்தா வதுஜார்ஜு சக்ரவர்த்தி
வாழியவர் பத்தினியா மாமேரி — வாழியவர்
புத்திரரும் பௌத்திரரும் பொற்புமிகு நற்குலமும்
சித்தமிகு நற்குணமுஞ் சேர்ந்து.

**பத்திராதிபர்.**

# நமது மாட்சிமை தங்கிய ஐந்தாவது
# ஜார்ஜ் சக்கிரவர்த்தி

புறநாடுகளிலிருந்துவந்து நமது நாட்டைக்கைப்பற்றிய புறநாட்டரசர்களிற் பலர் நமைக் கொடுங் கோன்மை புரிந்தாண்டதால் நமது உயிர் உடல் உடைமைகள் எல்லாம் நமதல்லாததாகி நாம் வருந்த நேர்ந்தது. நமது நாடு செய்த தவத்தாலும் நம்முன்னோர்கள் செய்துள்ள தவத்தாலும் நாமெல்லாஞ் சுகமடைய மேல்நாட்டாராகிய ஆங்கிலர் நமக்குத் தருணமழைபோல வந்து செங்கோலோச்சித் தண்ணளி செய்தனர்.

நம்மை முதல் முதலாக வந்து ஆண்ட அங்கிலர் யாரென்னில் இங்கிலாந்திற்கு அரசியும் இந்தியாவிற்குச் சக்ரவர்த்தினியுமாகிய விக்டோரியா மகாராணியாரே! இவர்கள் தண்குடைநிழலில் நாம் எவ்விதக்குறைவுமின்றி நம்முன்னோர் கனவிலும் கண்டறியாததும் மனத்திலும் நினைத்தறியாததுமான பல சுகங்களையும் வசதிகளையும் அநுபவித்தோம்.

உலகுக்கெல்லாம் அன்னைபோலவும் உயிர்களுக்கெல்லாம் நல்லுடல்போலவும் நம்மைத்தண்குடை நீழலிற்றயவாயாண்ட விஜையையென்னும் மாட்சிமைதங்கிய விக்டோரியா அம்மாள் அவர்கள் காலஞ்சென்றபின்னர் அவர்களுடைய திருப்புதல்வராகிய மாக்ஷிமை தங்கிய ஏழாவது எட்வர்டு தனது அன்னையார்போலவே நம்மைச் செம்மையாக ஆண்டருளி நம்மவர்களுக்கு மிக மிக அநுகூலங்களெல்லாஞ் செய்து பூபாரத்தைத்தனது திருப்புதல்வராகிய மாக்ஷிமைதங்கிய 5-வது ஜார்ஜு மன்னரவர்களின் தோளிற் சுமத்திப் பொன்னுலகரசை நாடிச் சென்றனர்.

இப்பொழுது நமது மாக்ஷிமைதங்கிய 5-வது ஜார்ஜு மன்னர் நம்மைக்குறையறக்காக்கக் கங்கணம்பூண்டு இந்தியா சக்ரவர்த்தி என்னும் பட்டத்தைத் தன் மனைவி சமேதராய் இந்தியாவிற்கு வந்து தலைநகராகிய அத்தினபுரி என்னும் டெல்லியில் பூண்டருளினார். இவர்கள் நமது இந்தியாவிற்குப் பலமுறை வந்ததுமன்றி நம்மவர்களோடு ஒட்டியுணரும் பெருமை மிக்கார். நமக்கு நன்மையைக்கோருதலையே தமது சந்தோஷமாகக் கொண்டவர். இவர் தனது பாட்டியாரையும் தந்தையாரையும்போல இங்கிலாந்திலிருந்தே இந்திய சக்ரவர்த்தி என்னும் மகுடஞ்சூடிக்கொள்ளாது நமது இந்தியாவிற்கு வந்து மகுடஞ்சூட்டுதலையே தனக்குப்பெருமை என்று கொண்டுள்ள உயர்ந்த எண்ணமும் கருணையுமே அவரது சிறப்பை நன்கு விளக்கும்.

நம்மையும் நமது நாட்டையும் கேவலமாக எண்ணாமல் பல இந்தியநாட்டரசர் சூழச் சக்ரவர்த்தி என்னும் பட்டம் தரித்துக்கொண்ட மாட்சிமைதங்கிய 5-வது ஜார்ஜ் சக்ரவர்த்தி நமக்குப்பலநன்மையைச் செய்வரென்பதற்குச் சந்தேகமுண்டோ? அவர்நம்மவரிடங்களிற்காட்டிய அன்பும் கருணையுமே அவர் நமது சுகங்களையே தமது சுகமாகக் கருதினவர் என்பதைத் தெளிவாகக்காட்டுகிறது.

நமது தேயத்தோரெல்லாம், நமது சுகத்தையே தமது சுகமாகக்கருதி நம்மைத்தண்குடை நீழலிற்காக்கக்கடன்மைபூண்டுநமக்குச் சக்ரவர்த்தியாக விளங்கும் மாட்சிமைதங்கிய 5-வது ஜார்ஜ் மன்னரையும் அவர் பத்தினியாரையும் அவர் புத்திரர்களையும் அவர் குலத்தாரையும் வாயார மனதார வாழ்த்துவாராக.

> "முறைசெய்து காப்பாற்று மன்னன் குடிகட்
> கிறையென்று வைக்கப் படும்"

என்ற திருவாக்கை மறப்பேமோ! 'எமது சக்ரவர்த்தியார் மாட்சிமைதங்கிய ஐந்தாவது ஜார்ஜ்கோமான் வாழி! அவரது பத்தினியாராகிய சக்ரவர்த்தினிமேரி அம்மாள் வாழி! இவர்கள் புத்திரரும் குலமும் வாழி!

எமது மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தியாகிய ஐந்தாவது ஜார்ஜ் மன்னர்நெடுநாள் எல்லாச்சுகமும்பெற்று ஒரு குறையுமின்றிவாழ்ந்து எம்மைத் தண்குடையாற் காக்குமாறு அருள் செய்ய எல்லாம் வல்ல இறைவனை ஏத்தித்துதிக்கின்றேம்.

**பத்திராதிபர்,**

## அகத்தியர்.

(170-ம் பக்கத்தொடர்ச்சி.)

☞ [**பிழை திருத்தம்** ஐப்பசி மாதம் வெளிவந்த 7-வது பகுதியில் 'அகத்தியர்' என்னும் விஷயத்தில் 147-ம் பக்கத்தில் 13-வது வரியில் " இன்னும் பிரகாரணங்களாற் பிற பெயர்களும் பூண்டவர் " என்பதை " இன்னும் பிற காரணங்களாற் பிற பெயர்களு முண்டு" என்று திருத்திக்கொள்ளவேண்டுகின்றேம். [ப. ர்.]

தமிழ்ப்பொதிய முனிவராகிய அகத்தியர் இந்திரன் வேண்டுகோளால் விருத்திராசுரனை இந்திரன் கொல்லுமாறு குடங்கையினை வெங்கடலடக்கி *ஆசமனஞ்செய்தனரென்றுபுராணங்கள் கூறுகின்றன.

---

* குறுமுனி கடலை உளுந்தளவாக்கி உண்டனர் என்னும் இதனையும், இதுபோன்ற பெரியோர்களின் சம்பந்தப்பட்ட கதைகளையும் கடவுளினருளால் இத்தகைய அற்புதங்கள் செய்துள்ளனரென்று கொள்ளுவதே சிறப்பாகும். சிலர் இஃதெங்ஙனங் கூடும்? இவைகள் இயற்கைக்கு மாறன்றோ? இது முற்றும் பொய். பேதையரே இதை நம்பவேணுமென்று பிதற்றிப் பாவத்திற்காளாகியழிகின்றனர்.

† அகத்திய முனிவரைப்பற்றிக் கூறும் புராண சம்பந்தமான கதைகளோ வெண்ணிறந்தன. அவைகளையெல்லாமெடுத்தெழுதுவ தென்றாலோ விச்சிறிய பத்திரிகை போதாது; ஆதலின் அவைகளை

---

சிலர் மதத்து வேஷத்தாலோ அறியாமையாலோ தாம் நுட்ப புத்தியுடையாரென விளங்கவேண்டியோ தாம் நவீனமாகக்கற்ற பாயனற்றபோலிச்சாத்திரங்களி னுதாரங்கொண்டோ வீண்வாதஞ்செய்ய வருதலுமுண்டு. இன்னோர் "முன்னவனே முன்னின்றால் முடியாத தொன்றுளதோ" என்னும் ஆப்தவாக்கியத்தாலும் "எம்பெருமானருள் மேவிலொரு, துரும்பும் படைத்தளிக்கு மிவ்வகிலாண்டத் தொகுதியையே" என்னும் தெய்வீகப்புலவர் மொழியாலுந் தெளிவடைவாராக. ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு ஜாதியிலும் ஒவ்வொரு மதத்திலும் ஞானிகள் தோன்றிக் கடவுளருள்பெற்று உலகுய்யுமாறு பல அற்புதங்கள் காட்டிக் கடவுளின் பேராற்றலைச் சிறிது விளக்கிப் போயிருக்கின்றனர், என்ற உண்மையைத்தெரிந்து தெளிதலே சிறப்பாகும். இம்மட்டுமெழுதியதால் இது உண்மையே என்று சாதிக்கவந்தேனல்லேன். பின்னென்னெனின் இஃதுண்மையாக இருக்குமென்றுவது அல்லது முன்னோர் கூறியுள்ள இதுபோன்ற விளங்காத விஷயங்களைக்கண்ட விடத்து இதன் உட்பொருளை யறிய நமக்கு இன்னும் அறிவு நுட்பமுறவில்லை யென்று நினைத்து நுட்பமானவற்றையும் நுணித்தாயும் அறிவைப்பெற முயன்று அவ்வறிவைப் பெற்று முன்னோர் கூறியவற்றினுண்மையும் அமைதியும் வன்மையும் அறிந்து ஆநந்தமுறலையாவது கைக்கொண்டு நலமுற வேண்டுமென்பதுகருதி எழுதியதென்கதமக்குத்தெரியாததும்தமதுபுத்திக்கெட்டாததுமாகி யவொன்றைக் கண்டவிடத்துத் தமது அறிவின் குறையையுணருணர்வின்றிஆன்றோர் நூலிற் குற்றகூற முன்வருவது பெரியோரை நிந்தித்தலென்னும் பாவமாகும். நமது பெற்றோரைக் கனம்பண்ணஎவ்வாறுகடமைப்பட்டிருக்கின்றோமோ அதுபோலவே நமதுமுன்னோரையும்அவர்கள் நமக்காகக் கருணையோடு எழுதியுள்ளநூலையும் கனம் பண்ணுதலேநலமாம். பெரியோரை நிந்திப்பவர்க்கு ஏற்பட்டுள்ளஎமதண்டனைகளை எழுத நினைத்தேம் ஆனால் மனமுங்கையு நடுங்கினபடியால் எழுதுதற்கும் அஞ்சிவிடுத்தேன்.

† அகத்தியமுனிவரின் புத்திரராகிய சித்தமுனி என்பவரின் புத்ரர் சுபதிட்ட முனிவர் என்பார் யாழ்ப்பாணத்தை யாண்ட பாராச சேகரச் சக்கரவர்த்தியின் கொலுமண்டபத்துக்கு வந்து அவனைக் கண்டு பறங்கிகள் உலாந்துக்காரர் ஆங்கிலேயராதி ஐரோப்பியர்கள் நமது ஊரில் வந்து ஆளுகை செய்வரெனத் தீர்க்கதரிசனம்சொல்லிப் போயினரென்றும் கர்ணபரம்பரையாக ஒரு கதையும் கொழும்புத்தீவிற்கூறி வருகின்றார்கள்.

விடுத்துத் தமிழ்ச்சம்பந்தப்பட்ட மட்டிலும் சில சொல்லிச் சுருக்கி முடிக்கின்றோம்.

அகத்தியர் தென் திசைவரும்பொழுதே முக்கண்மூர்த்தியாகிய சிவபெருமானிடத்தே தமிழைக்கேட்டுணர்ந்து வந்தனரென்று முன்னரே கூறியுள்ளேளம். நெற்றிக்கண் நிமலனுருக்குக் குடிலைப்பொருளைத் தெரித்த காரணத்தானே சுவாமிநாதனென்னுந் திருப்பெயரிட்டழைக்கப்படுபவராகிய சுப்பிரமணியக்கடவுளிடத்தே அகத்தியனார் தமிழினிலக்கணத்தைக் கேட்டுணர்ந்தாரென்றும் ஆன்றோர் மொழிந்துள்ளனர்.

இவர் பாண்டியர்கள் நிறுவிய முதற் சங்கத்தும் இடைச்சங்கத்தும் இவர் சங்கப்புலவராக அமர்ந்திருந்தனர். அகத்தியர் இமயமலைக்கும்விந்தமலைக்குமிடையேயுள்ள புண்ணியபூமியென்று சொல்லப்படும் ஆரிய வர்த்தத்திலே பிறந்தவரென்றும் உத்தர நாட்டிலிருந்த ஆரிய பிராமணர்கள் அகத்தியரைத் தலைவராகக்கொண்டு உண்ணாட்டுள் நுழைந்தார்களென்றும். இவர் ஆரியமொழியே யுடையர். இவர்கள் வந்தகாலத்து இமயமலைக்குத் தெற்கே தமிழ் மொழியே வழங்கி வந்ததென்றும், ஆரியர்கள் மிகுந்து பெருகித் தமிழ்மொழி மக்களுக்கு மேற்பட்டவராகித் தமிழர்களை ஒடுக்கிய பொழுது அவர்கள் தென் திசையுற்றனரென்றும்; அப்பொழுது தெற்கே யரசு செய்துவந்த பண்டைத் தமிழ்க்குடி மன்னராகிய சேர சோழ பாண்டியர்களென்னும் மூவேந்தர்களும் தமிழைப் பரிபாலித்தார்களென்றும், பின்னும் அகத்தியர் தென் திசை நோக்கி நோக்கிச்சென்று ஆங்குள்ள அரசர்களிடத்து நட்பாடி அவர்களாற் போற்றப்பெற்று அன்னோர் வேண்டுகோளால் தனதுகூர்த்தமதியாற் சீர்த்ததமிழை நேர்த்தியாகப்பிரகாசிக்குமாறு இலக்கணமுதலியன வகுத்தும் மாணாக்கர்களுக்குப் போதித்தும் தமிழுக்குருந்துணையாயினரென்றுஞ் சிலரபிப்பிராயப்படுகின்றனர்.

நிற்க, தமிழ்மொழிக்கு அகத்தியர் தந்தையல்லரென்றும் ஆரியம் போலவே தமிழும் தனி மொழியென்றும் தெரிகின்றது.

"தமிழ் மொழி"யாகிய குழந்தையைத் தாராட்டிப் பாராட்டிப் பாலூட்டி வளர்த்த கைத்தாய் இவ்வகத்தியரேயென்றும் நனிவிளங்குகின்றது. இன்னும் இவர் பாண்டிய நாட்டிலிருந்தே தமிழைப் பரிபாலித்தனரென்றுந் தெரிகின்றது.

இதனை "சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ்
சவுந்தர பாண்டிய னெனுந் தமிழ் நாடனும்
சங்கப் புலவருந் தழைத்தினி திருந்த
மங்கலப் பாண்டி வளநா டென்ப"

என்னும்பா நன்றாய் விளக்கும்.

(இன்னும் வரும்)

பத்திராதியர்.

# ஓர் அற்புதக் கனவு.

வடதேயத்தின் நெடுந்தூரத்தில்அமைந்துள்ள டெல்லிமா நகரத்தில், ஆங்கில மன்னராகிய நமது சக்காவர்த்திக்கு முடி சூட்டப் பிரயத்தனங்கள் செய்வதாயும், நம்நாட்டரசர், பற்பல சிற்றரசர், மற்றுஞ் சில கனவான்களும் அவ்வற்புதக்காட்சியைப் பார்ப்பதற்காக அழைக்கப்பட்டனரென்றும், எனக்கு சில நாளைக்கு முன் தெரியவர்தது. அக்காட்சியைப் பார்க்க ஆயிரங்கண்கள் வேண்டுமெனவும், கோடி கோடியாய்த் திரவியங்கள் செலவிடப்படுகின்றனவெனவும் இதற்கு முன் இவ்விதக்காக்ஷியை எப்பொழுதும்,எவ்விடத்தும்,யாரும் பார்த்திராதவவ்வளவு அழகாயிருக்குமெனக் கேள்வியுற்றதினால்நம்மையும் அவ்விடத்திற் கழைப்பார்களோவென்று நினைக்கலாயினேன். அது எப்படி முடியும் என்னைப் போலொத்த ஜனங்களைவிட நான் யாதாகிலும் விசேஷித்த சிறப்பையாவது, பட்டங்களையாவது அடைந்திருக்கிறேனில்லை. ஜீவனம் செய்து நாள் கழிப்பதே கஷ்டமாயிருக்கிறது. தினத்திற்குவேண்டியதைத்தவிர அதிகம் என்னிடம் கடுகளவேனும் இல்லை. இதுவரையிலும் ஆடம்பரம், அதிகாரம், கீர்த்தி முதலியன எப்படி இருக்குமோ தெரியாது. கேவலம் மனிதனென்னும் பட்டத்தைத் தவிர வேறு பட்டம் எனக்குக் கிடையாது. இப்படி யிருக்க இரத்தின ஆபரணங்களும், பட்டாடைகளும் தரித்த பற்பல நாட்டு மன்னரும், அநேக வித பட்டங்களும் பிரதிஷ்டையுமுடைய கனவான்களும் கூடத்தக்க தர்பாருக்கு என்னை யழைப்பார்களென்று நினைத்தல் மிகவேடிக்கை யன்றோ! ஆயினும் நான் எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன். ஓர் நூதனமான சிந்தனை! வீணான மனோராச்சியம் !!

நிற்க ஒரு நாள் நானும் என் சிநேகிதரும் வழக்கப்படி காவிரிக்குச் சென்று, அவ்விடம் நேர்த்தியாய் அமைந்துள்ள, நிலவளம், சோலைவளம், தோப்புவள முதலியவைகளைக்கண்டு களித்து வீட்டுக்குத் திரும்பிவருகையில் என் மனதிற் குடிகொண்டிருந்த எண்ணத்தை அவருக்கு வெளியிட்டேன். அவர் சிறந்த புத்திமான். ஆங்கிலம் கற்றவர். எவ்வித சங்கதிகளிலும் சிறிது ஆராய்ச்சியுடையவர். என் வார்த்தைகளைக் கேட்டதும் புன் சிரிப்புடையராய் "என் வீணாக மனோராச்சியம் பண்ணுகிறீர். முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டால் அது கிட்டுமோ? வீணெண்ணமும்,மனோராச்சியமும் மனிதனை யலக்கழித்து வருத்த முறுத்துந் தன்மையை யுடையன. உம்மை அண்டை வீட்டிலிருப்பவருக்கும் தெரியாது. இப்படி இருக்க உம்மை டெல்லியில் நடக்கும் தர்பாருக்கு எப்படி யழைப்பார்கள். சடுதியில் அச்சிந்தனையைத் தொலைத்து மனதைச் சரிப்படுத்திக் கொள்ளும்" என்றார். அவர் சொன்னதும் எனக்கு நாராசங்காய்ச்சி நடுச் செவியில் வைத்தாற் போலிருந்தது. ஆனால் அவர் புன்சிரிப்போ

அவர் வார்த்தைகளைக் காட்டிலும் பதின்மடங்கு என்னை வருத்திற்று எனக்கச்சமயத்தில் வந்த கோபமும், வருத்தமும் இவ்வளவென்று சொல்லித் தொலையாது. யாதொன்றும் பேசாமல் சடுதியில் நடந்தேன். வீட்டிற்குச் சமீபத்தில் வந்ததும், சிநேகிதரை விட்டு, திடீரென்று என்னறைக்குள் நுழைந்து அவ்விடமிருந்த ஓர் சாய்பு நாற்காலியில் உட்கார்ந்து பின் வருமாறு நினைக்கலானேன்.

ஏன் நம்மைத் தர்பாருக்கு அழைக்கமாட்டார்கள். அவ்வற்புதக்காக்ஷியைப் பார்த்தானந்திக்கும் பாக்கியம் நமக்கில்லையே. டெல்லி நகரத்தில் கூடப்போகிற யாவரும் நம்மைப்போலொத்த மானிடர்களல்லவோ? அவர்களைச் சிருஷ்டித்த கடவுள்தான நம்மையும் படைத்தார், தற்காலமவ்விமையில் என்னைக் காட்டிலும் அதிகவுயர் ஸ்திதியிலிருப்பதாகக் காணப்பட்டாலும் சிருஷ்டியில் எனக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமுமில்லையே. ஆனால் லக்ஷக்கணக்கான மனிதர்கள் நம்மைப்போலவே பார்க்க முடியாதவர்களாயும், அழைக்கப்படாதவர்களாயுமிருக்கிறார்களே. இப்படி இருக்க நாம் மட்டும் ஏன் இவ்விதச் சிந்தனை செய்யவேண்டும். நாம் பார்க்காமற்போனால்போகட்டும், நம்மைப்போலொத்த மனிதர்கள் சிலர் பார்க்கிறார்களென ஏன் ஆனந்திக்கக்கூடாது மற்றவர் அக்காக்ஷியைப் பார்க்கும் பாக்கியமுடையவர்களாயிருக்கிறார்களென்று பொறாமைப்படுவதில் என்ன பயன் பகுத்தறிதலோடு 'நான்' என்பதைவிட்டு 'நாங்கள்' என் நினைத்து, இந் 'நாங்கள்' சிலர் பார்க்கிறார்களென்று கருதி ஏன் சந்தோஷப்படக்கூடாது? நான், என் சொத்து, என் வீடு, என் பிள்ளை என்பதாலல்லவோ இவ்வுலகின்கண் சம்பவிக்கும் துன்பத்துக்கும், பொறாமைக்கும் காரணம், என இவ்வித சிந்தனைகளுள் ஆழ்ந்து என்னை மறந்து விட்டேன். இச்சமயத்தில் தபாற்காரன் ஓர் கடிதம் கொணர்ந்து கொடுத்தாற்போலிருந்தது. அக்கடிதத்தை உடைத்துப்பார்த்து அதுஓர் சக்கரவர்த்தியின் முடிசூட்டும் தர்பாருக்கு என்னை அழைக்க அனுப்பினதாயிருந்தமையால் அதிக ஆச்சரிய பரவசமடைந்தேன், நமது இந்திய சக்கரவர்த்தியாகிய ஐந்தாவது ஜார்ஜ் மன்னருக்கு டெல்லியில் முடிசூட்டுஞ் சமயத்திலேயே, மேற்கூறிய தர்பாரும் நடக்கப்போகிறதாக அக்கடிதத்தில் குறித்திருந்தது. புத்திசுவாதீனத்திலில்லையோ அல்லது உன்மத்தனாய் விட்டோமோ என்று நினைத்தேன். ஆனால் மாட்சிமைதங்கிய கடவுளின் இராச்சியமாகிய இப்பிரபஞ்சத்தில் ஜனித்திருக்கும் மானிடர்களில் நான் எவ்வளவு தாழ்மையானவனாய் இருந்தபோதிலும் **அவர்** கிருபை எனக்கும் உண்டென்றுசிறிதேனும் தெரியவில்லை. ஏனெனில் மேற்சொல்லியகடிதம் காரணகர்த்தாவாகிய முழுமுதற் பொருளினிட மிருந்துவந்திருந்தது! இச்செய்தியைக் கேட்கவும் யாவரும்பிரமிக்கக்கூடும். ஆயினும் நீங்கள் அனேகநாள் ஆச்சரியத்தில் மூழ்கி இருக்கவிடேன்.

(தொடரும்) T. G. சிங்காரவேலு.

# திருப்பெருந்துறை விளக்கம்.

(184-ம்பக்கத் தொடர்ச்சி.)

மாணிக்கவாசக சுவாமிகள் காலம் சைவசமையாசாரிய மூர்த்திகளாகிய மூவர் காலத்துக்கும் பின்னிட்டதென்று காட்டவேண்டுமென்பது மகா-ள-ள-ஸ்ரீ கோபிநாதராவு அவர்கள் நோக்கம். அதற்குச்சாட்சியமாக அவர்கள் கைக்கொண்டவையும் அவர்களுக்கு நியாயமென்று தோன்றியவையுமானபலவற்றில் இரண்டுவருமாறு. க-வது மாணிக்கவாசகசுவாமிகளுக்குக் கடவுள் குருமூர்த்தியாயெழுந்தருளி ஞானோபதேசம் செய்த தலமென்று சொல்லப்படும் ஆளுடையார் கோயிலில் மாணிக்கவாசகசுவாமிகளால் திருப்பணி செய்விக்கப்பட்டதென்று சொல்லப்படுகிற ஆலயத்தில் காணப்படுகிற கல்வெட்டு எழுத்துக்கள் அதாவது சிலாலிகிதங்களில் மாணிக்கவாசகசுவாமிகள் பெயர்காணப்படவில்லை யென்பதொன்று. மற்றொன்றுசிதம்பரக்ஷேத்திரத்தை மாணிக்கவாசகசுவாமிகள் தாமியற்றிய நூல்களிற் பொன்னம்பல மென்று சொல்லிப்புகழ்ந்திருப்பதாயும். சிதம்பரசபையைப் பொன்னுலாக்கியவன் பராந்தகச் சோழனானதால் இப்பராந்தகச்சோழன்காலத்துக்குப்பின்பே மாணிக்கவாசகசுவாமிகள் காலமென்பதுவுமே. பராந்தகச்சோழனுக்குமுன்பே நமது சிற்சபை பொற்சபையாக வேய்ந்திருப்பதாயும் ராவு அவர்கள் கூற்றுக் கொஞ்சமும் பொருத்தமில்லையென்றும் நமது தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ நாகை வேதாசலம்பிள்ளையவர்கள் தக்க விடையளித்துத் தமது ஞானசாகரப்பத்திரிகையில் விவரித்திருக்கிறார்கள். மகா-ள-ள-ஸ்ரீ சேஷய்யரவர்களும் விவாத ச-வது சஞ்சிகையின் ௩௯ சரு சக பக்கங்களில் தக்க ஆதாரங்களைக்காட்டி ராவு அவர்கள் கொள்கையை முற்றிலும் மறுத்திருப்பது மிக்க புகழ்ச்சிக்குரியதாயிருக்கிறது. ஆனதாலிதுவிஷயத்தை நிறுத்தி ஆளுடையார்கோயில் விஷயமொன்றையே யிவ்விரண்டாம் பாகத்திலெழுதுகிறேன். ஆளுடையார் கோயிலிலுள்ள ஆலயக்கட்டடம் நூதனமென்பதை ஐயரவர்களும் அங்கீகரித்தவர்களாகி வாதபுரீஸ்வரர் குதிரை கொள்ளச்சென்றது பாண்டியன் இராஜதானியாகிய மதுரைமாநகரத்துக்கு மேலத்திக்கையும் மேலச்சமுத்திரக்கரையிலுள்ள ஒரு பட்டினத்தையும் நோக்கியுமென்றும் மலையாளநாட்டிலுள்ள வைக்கமென்னுந்தலத்தில் மாணிக்கவாசக சுவாமிகளுக்குக் குருமூர்த்தியாகக் கடவுள் வெளிப்பட்டு உபதேசஞ் செய்ததென்றும் அதற்கு வேண்டிய ஆதாரங்கள் திருவிளையாடற்புராணம் வாதவூரர் புராணம் இவைகளிலேயிருப்பதுபோலவும் மேற்கண்ட நூல்களில் சிலவாக்கியங்களை (ஒரு அதிகாரி இன்னான்வீட்டில் தவலை திருட்டுப் போயிற்றென்று எழுதினபோது தவலையென்னும் மொழியில் நடுவெழுத்தை விட்டுவிட்டு எழுதி அதினால் விளைந்த அநர்த்தம்போல) புரா

தனநூல்களின் முன்பின் வாக்யெங்களை யோசித்து முடிவுக்கு வராமல் சில எழுதியிருக்கிறார்கள். பொன்னம்பலம்பிள்ளை யவர்களோ குடகுநாட்டில் மேலச்சமுத்திரக்கரையிலுள்ள திருப்புணித்துறையென்னு மொரு துறைமுகப் பட்டினத்துக்கு மாணிக்கவாசகசுவாமிகள் குதிரைவாங்கச்சென்று அங்கிருந்து அரேபியாதேசத்தாரோடு குதிரைகளுக்கு ஏற்பாடு செய்ததாகவுஞ் சொல்லிக் குதிரைகளுங் குடகுநாட்டிலிருந்தே வந்ததென்றும் மாணிக்கவாசகசுவாமிகளும் திருவாசகத்தில் அவ்விதமாகவே அருளிச்செய்திருப்பதாயுஞ் சொல்லுகிறார்கள். இப்போது நாம் எழுதப்புகுந்து ருசிப்பிக்குஞ் சித்தாந்தம் இவர்கள் கொண்டகருத்துக்கு முற்றிலும் எதிரிடையானது. அதாவது மாணிக்கவாசகசுவாமிகள்மதுரையிலிருந்து கீழ்த்திக்கைநோக்கி கிழக்சமுத்திரக்கரையிலுள்ள ஓர்பட்டணத்துக்கேகுதிரைகொள்ளச் சென்றார்களென்பதும் அத்திக்கிலிருந்தே குதிரைகள் மதுரைக்குவந்தவென்பதுவுமே. ஆனதால் இருவரும் ஒருவருக்கொருவர் முரணுகச்சொல்லும் வைக்கம் திருப்புணித்துறை இரண்டுக்குமுள்ள தாரதம்மியத்தை யிதில் விசேடித்தாராயவேண்டுவதில்லை. ஐயரவர்களும் பிள்ளையவர்களுஞ் சொல்லுங்காரணங்களை ஒவ்வொன்றாக முன்னர்க் காட்டி அக்காரணங்கள் அவர்கள்கொண்ட முடிபுக்கு அணுத்துணையும் ஆதாரமற்றதென்பதைப்பின்னர் காட்டுதும். அவர்கள்சொல்லுங்காரணங்கள் வருமாறு.

க-வது திருப்பெருந்துறையென்ற தொடர்பதத்துக்குச்சரியான பொருள் கப்பல்கள் வந்திறங்கும் பரிசுத்தமான பெரிய கடற்றுறைமுகப்பட்டினமாம் (The Sacred great Harbour.)

உ-வது முந்திய திருவிளையாடற்புராணத்தில் (அதாவதுநம்பியார் திருவிளையாடற்புராணம்) திருப்பெருந்துறையைச் சொல்லும்போது "தாவுமாவிறங்கு பட்டினம்" என்று சொல்லியிருக்கிறதாம்.

ங-வது பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணத்தில் திருப்பெருந்துறையைக் குறிப்பிடும்போது "வேலைத்துறை" யென்றுசொல்லியிருக்கிறதாம்.

ச-வது மேற்படி திருவிளையாடலில் திருப்பெருந்துறையை பின்னுங்குறிப்பிடும்போது ஆரியர்கள் குதிரைகளுடனிறங்குகிற "நெடும்புவிசார்தருமாழ்கடலின்கரை" யென்றுஞ்சொல்லியிருக்கிறதாம்.

ரு-வது ஆவுடையார்கோயிலானது முந்தினகாலத்தும் இக்காலத்தும் மேற்காட்டியவாறு கடற்றுறைமுகப்பட்டினமா யில்லையாம்.

சூ-வது மாணிக்கவாசகசுவாமிகள் மேலத்திக்கிலுள்ள பெரிய கடற்றுறைமுகத்துக்கு (The gread western harbour) ச்சென்றதாக வாதவூரர்புராணத்தில் சொல்லியிருக்கிறதாம்.

எ-வது திருவாசகத்தில் திருப்பெருந்துறை மேலநாட்டிலிருப்பதாகச் சொல்லியிருக்கிறதாம்.

அ-வது திருப்பெருந்துறைக்குச் சென்றபோது மார்க்கத்தில் அநேகவனம் மலைகளைக்கடந்து அந்த இடத்தை அடைந்ததாகவும் பரஞ்சோதியார் திருவிளையாடற்புராணத்திலும் வாதவூரர் புராணத்திலும் சொல்லியிருக்கிறபடி மேல்சமுத்திரக் கரைக்குப்போகும் மார்க்கத்திற்றான் மலைகளுங்காடுகளு மிருக்கிறதென்றும் ஆனதினால் மேற்குத்திக்கைநோக்கி மலையாளநாட்டிலுள்ள கடற்றுறைப் பட்டினத்துக்கேதான் சுவாமிகள் சென்றிருக்கவேண்டுமாம்.

கூ-வது திருப்பெருந்துறையைச் சுவாமிகள் தமது திருவாசகத்தில் குறிப்பிடும்போது தென்னஞ்சோலை சூழ்ந்தவிடமென்று சொல்லியிருப்பதற்குப் பொருத்தமாக வைக்கம் முதலிய விடங்களேதென்னஞ்சோலை சூழ்ந்தவிடங்களாம்.

கம-வது அச்சன், எந்துவே, டறை, முதலிய சில மலையாளநாட்டுப்பதங்கள் சுவாமிகள் வாக்காகிய திருவாசகத்தில் வந்திருக்கிறதாம்

கஉ-வது மலையாள நாட்டிலுள்ள வைக்கமென்னுந் தலம் திருவனந்தபுரம் சமஸ்தானத்தில் மிக்க விசேஷமான சிவதலமென்றும் அதிலெழுந்தருளியிருக்கும் பிரதான தெய்வத்துக்குப் பெருந்திராக்கோயில்அப்பனென்று (Perumtra Koil appan) இப்பொதுப்பெயர்வழங்குவதாகவும் பெருந்துறைக்கோயில் அப்பனென்ற பதம் சிதைபட்டு இப்படி வழங்குவதாகத்தாம் நம்புவதாகவும் அக்கோயிலுக்கு வெளியில் ஒரு மரத்தடியில் ஒரு பெரியவருக்குச் சிவன் உபதேசஞ்செய்தாரென்று அங்கு வழங்கப்படுஞ் சரித்திரத்துக்கு ஞாபகார்த்தமாக வருஷோற்சவம் நடந்து வருவதாயும், ஆனதால் திருப்பெருந்துறையென்பது வைக்கமே யென்றும்

பின்னுங்குறிப்பிட்டு யோசிக்கத்தகுதியாயிராத சிற்சிலவற்றையெழுதி மாணிக்கவாசகசுவாமிகள் குதிரைகொள்ளச் சென்றதுமேல்சமுத்திரக்கரையேயென்றும் சுவாமிகள் உபதேசம்பெற்ற தலம்வைக்கமேயென்றும்ஆளுடையார் கோயிலென்னுந்தலத்தைப்பிற்காலத்தார் வைக்கந்தூரத்தி லிருப்பதினாலே சமீபத்தில் வைக்கத்தைப்போல வேற்படுத்திக்கொண்டார்க ளென்றும் இவ்விதமான ஆகாயக்கோட்டைகட்டி கடைசியாய் ஒருவிதமுடிபுக்கு ஐயரவர்கள் வருகிறார்கள்.

இப்போது மேல்விஷயங்களை ஒவ்வொன்றாய் அனுவதித்து உண்மையை வெளிப்படுத்துவாம். முதலில் திருப்பெருந்துறை யென்ற தொடர்மொழிக்கு Sacred great Harbour கப்பலிறங்கும் பரிசுத்தமான பெரிய கடற்றுறையென்று கொண்டபொருள் சரியாவென்பதை ஆராய்வாம்.

திரு = அழகிய, பெரும் = விசாலமான, துறை = நதிதீரமெனப் பொருள்படும். துறை யென்னும் மொழி, நதியென்று பொருள்படுமென்பதைச் சூடாமணி நிகண்டு இடப்பெயர்த் தொகுதியில் "உந்தியே துறையே மற்றை யொலியலே குடிஞையோணஞ்—சிந்துவே

நதியே வீசுந் திரைவருபுனலே யாரும்" என்னும் 20-வது செய்யுளா லறியலாம். வெகு காலத்ததாகிய சேந்தன் திவாகரம், பிங்கலந்தை நிகண்டு, இவைகளிலும், இதற்கு மாறுபாடாகக் காணக்கூடவில்லை. பொன்னியாற்றுக் குரிய சோழனைப் பொன்னித் துறைவனென்றும் பொருனையாற்றுக்குரிய பாண்டியனைப் பொருனைத் துறைவனென்று மழைப்பதனாலுங் காணலாம். இதுபோல் நதிக்கரையிலுள்ளவைக ளும், சமுத்திர தீரத்துக் கநேகங் காதவழி யெட்டியவைகளுமான வநேகந் தலங்கட்குத் துறை யென்னும் மொழியை யநாதியாகவே அத்தலப் பெயர்களி னீற்றில் சேர்க்கப்பட்டிருக்கிறது. காவேரி நதிக் கரையினிரு பாரிசத்திலு முள்ள தலங்களின் பெயர்களைத் தெரிந்தாலிது விஷயத்தி லையம் நீங்கும். உதாரணமாகச் சிலவறை வாம். கடம்பந் துறை, திருப்பாய்த் துறை, திருத்தவத் துறை, அன்பிலாலந் துறை, சோற்றுத் துறை, திருவாவடு துறை, மயி லாடு துறை முதலிய. இத்தலங்க ளெல்லாம் சமுத்திரக் கரைக்குக் கொஞ்சமும் சமீபமல்ல. ஆனதாற்றுறையென்ற மொழிக்குக் கடற் றுறை அல்லது கப்பல்களிறங்குங் கடற்றுறை முகமென்னும் பொரு ளே கிடையா. துறை யென்னுந் தனிமொழிக்குப் பொருளின்ன தின்னதெனத் திவாகர முதலிய நிகண்டுகளிற் காணுவதரிதாயினும், ஆறு, இடம், இறங்குதுறை, எல்லை, கலித்துறை, காரியம், தங்குமி டம், நீர்த்துறை, நூல், பாவினத்தொன்று, வழியெனப் பலபொருள் கொடுக்குமோர் மொழியென வகராதியாற் றெரிந்துகொள்ளலாம். அகராதியானது திவாகரம் நிகண்டு முதலிய நூல்களாதாரத்தோடு இலக்கிய நூல்களில் வழங்கும் வழக்கச்சொல், மரூஉச்சொல், திசைச் சொல் முதலிய பிரயோகத்தின் பொருளைக்கண்டுபிடித்துப்பிற்காலத் துப் புலவர்களால் வெளியிடப்பட்ட நூல். இந்த நூலிலும் துறை யென்ற மொழிக்குக் கப்பலிறங்குங் கடற்றுறைமுகமெனப் பொருள் விரிக்கக் காணவில்லை. துறையென்ற பதத்தினால் கப்பலிறங்குங் கடற்றுறை முகத்தைக் குறிப்பிடவேண்டுமானால், கடற்றுறை, கப்பற் றுறை, துறைமுகம், ரேவுதுறை, யென்பதுபோலச்சிறப்பான அடை மொழிகள் சேர்க்கவேண்டும். இல்லாவிடில் இறங்குதுறை, நீர்த்து றையென்ற பொதுப்பொருளையே பயக்கும். இதினாற்றான் நமது பரஞ்சோதியார் தாமருளிய திருவிளையாடற் புராணத்தில் துறை யெனப்பொதுப்படக் கூறுமல் "வேலையந்துறை" யென்றார். கடற் கரைக்கும் கப்பல்களிறக்குமதிசெய்து கடற்கரையில்வியாபாரஞ்செய் யும் ஊர்க்கும், தமிழ்ப் பாஷையிற் சிறப்புப் பெயர்களுள, "பாரியபா ராவாரம் பார் வேலை கடற்கரைப்பேர்" "தாழ்கடற்றீரந்தன்னிற்பற் பல தீவின் பண்டம் பகர்வபட்டின மென்றுமே" எனுஞ் சூடாமணி நிகண்டுச் செய்யுளாலறியலாம்.

(இன்னும்வரும்) திரு. சாம்பசிவம்பிள்ளை.

(Retired Sub-Magistrate, Trichinopoly.)

# மனோகரன்.

(63-ம் பக்கத்தொடர்ச்சி.)

அக்கள்வனும் எஜமானன் சகாயத்தை யடையவேண்டி அம்மசு தர்திலகத்தைத் தலைவனிடம் விட்டான். அச்சந்தோஷத்தினால் தலைவனும் அவனை நூறு திருடர்களுக்குத் தலைவனாக்கினான். அந்நங்கையானவள் மூர்ச்சையடைந்திருந்ததினால் அப்படியே தனது இல்லத்திற்குக் கொண்டுபோய் மூர்ச்சை தெளிந்தபின் கடிமணம் புரிந்து கொண்டான். இந்த வழக்கமும் திருடர்களுள் அநேகமாய்ப் பரவிவந்தது. இவர்கள் நிசியில் திருடும்பொழுது யாரேனும் மங்கையர்களைக் காணில் அவர்களது ரூபத்திற்கு அடிமைப்பட்டு மயங்கச்செய்து தூக்கிவந்துவிடுவார்கள். யாவரேனும் இவர்கள் கையில் சிக்கினால் அவர்கள் தங்கள் உயிருடன் தப்புவதரிது. இவர்கள் தங்கள் தனத்தைக் காட்டி அவர்கள் மனதைக் கொள்ளை கொண்டு மணம் புரிவார்கள். அவர்களும் மூடமதியால் தங்களது சொந்தக்கணவனை விட்டு இவர்களைக் கடிமணம் புரிவார்கள். தப்பிச் செல்வதுதான் அரிதென்றால் தங்களது கற்பைக்கெடுத்துக் கொள்வானேன்? ஒன்று தான் உயிரை விடுகிறது அல்லது தங்களது கணவரைத் தியானித்து அந்த பலத்தினால் இவர்களை த்வம்சம் செய்து தப்பிப் போகிறது, இதை விட்டு வேசியர்போல், தங்கள் மனதை நிலந்தரமாய் வைக்காமல், அலையவிடுவது மகாபாதகமன்றோ!

யாம் கதையைத் தொடர்வோம். அப்பாலகனைக் கண்டதும் அவள் மனதில் ஏதோ சில எண்ணங்கள் தோன்றியது. அதனால் மனச்சோர்வடைந்து என்னை ரகசியமாய் அழைத்து வந்து நீர் இப்பாலகனைக்காப்பாற்றுவீரேல் மிகுந்தபுண்யம் செய்தவராவீர். உமக்கு அளவற்ற செல்வம் உதவுவேன் என்றாள். நான் பாலனது லக்ஷணத்தினால் கிரகிக்கப்பட்டு இவன் பிற்காலத்தில் ஏதேனும் அற்புதச் செயல் செய்யக்கூடும் என்று எண்ணி அப்படியே வாக்களித்தேன். இன்று அந்தக்குழந்தையை எடுத்து வந்தவள்தான் அம்மங்கையர் சிரோமணி. அவள் என்னைக் காணாததினால் மிகவும் சோகத்துடன் கண்ணீர்விட்டாள். நாம் அந்தப் பாலகனைத் தப்புவித்துவிட்டோம் அவன் யாவனென்று எனக்கேனும் அந்நங்கைக்கேனும் ஒன்றும்தெரியாது. அவன் நிச்சயமாய் எனதாட்களால் கிராமத்திற்குக்கொண்டு போகப்பட்டிருப்பன். யாம் விரைவில் சென்று அவன் யாரென விசாரிப்போம் எனக்கூறி என்னையும் கிராமத்திலிருக்கும் அவரது கிருகத்திற்கு அழைத்துச்சென்றார்.

ஆங்கு முதலில் நான் கண்டது நமது கதாநாயகனாகிய மனோகரனே! அச்சமயம் யான்எப்படிச்சந்தோஷமடைந்தேனெனில் வானத்தில் கனத்த கருமுகில்கள்கூடி நாலாபக்கமும் ஓடி பூவுலகுமுழுதும்

அந்தகாரத்தால்மூடிச் சப்தமேகங்களுங்கூடிவருஷிக்க நடுவனாந்தரத்தில தன்னந்தனியே அந்தள்ளிருளில் அகப்பட்டுக்கொண்ட பிரயாணிகருத் திடீரென வானம் வெளுத்து, மேகம் ஒளித்து, மின்னல் மறைந்து, இடி ஓய்ந்து, மழை நின்று, ஆகாயத்தில் விண் மீன்கள் தோன்றிப்பூர்ணகலைச்சந்திரன் தனதுமுழுப்பிரகாசத்துடன் தனதொளியைவீசி, அந்தகாரமான வனத்தில் நடந்துசெல்ல வழிகாட்டினால் என்ன குதூகலமடைவாரோ அதைக்காட்டிலும் பதின்மடங்கு ஆநந்தம, இதுகாலம் துன்பக்கடலில் மூழ்கியிருந்த எனக்குண்டாயிற்று. நான் ஆநந்தக் கண்ணீர் விடலானேன். எனது முயற்சியும் வீண் போகாமல் பலித்தது. ஏனெனில் "முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்" என்ற மூதாட்டிவாக்கும்பொய்க்குமோ! ஒருக்காலுமில்லை. எனது நண்பரிடம அந்தக் குழந்தையினது பூர்வோத்திரங்களை விவரமாய் விரித்துரைத்து; அவர் வீட்டிலேயே வளர்ந்துவரும்படி விட்டேன். நான் அடிக்கடி வந்து போவதனால் பாலகன் சுக்கிலபட்சத்துச் சந்திரனைப் போல் மேனி குன்றாது புத்தியிலும் வித்தையிலும், வளர்ந்து வந்தான். ஐந்தாம் வயதில் அக்ஷராப்பியாசம் செய்து வைத்தார்கள். அக்காலத்தில் தற்காலத்தைப்போல் ஆங்கிலம் கற்கும் கலாசாலைகளிலலாவிடினும், ஊர்ச்சாவடிகளிலும், பெரிய வீடுகளின் திட்டையிலும்; எளியவர்கள் தங்களது காலக்ஷேபத்திற்காகவேண்டி கிராமப்பையன்களுக்குப் பாடம் சொல்லி வந்தார்கள். இவர்கள் தங்களது நிலமையைச்சற்றும்கவனிக்காது தாங்கள் வைத்ததே சட்டமெனப் பையன்களை ஆண்டுவந்தார்கள். சிறுவர்கள் யாவரும் விடியற்காலையில் நான்கு மணிக்கே பாடசாலைக்கு வந்து சேரவேண்டும். கோடை காலமாயிருந்தாலும் மாரிகாலமாயிருந்தாலும் ஒன்றேதான். கொக்குக்கு ஒன்றேமதி என்பதுபோல அவ்வுபாத்தியாயர்கள் குளிரிலேயே பையன்களை வாச்சொல்கிறது. ஆனால் இவர் நன்றாய்க்குறட்டை விட்டுத் தூங்குவது வழக்கம். ஆனால் பையன்களோ சட்டாம்பிள்ளை என்னும் தலைமைப்பையனால் நடத்தப்படுவார்கள். அவன் அதிகாரத்திற்குச் சில தடவைகளில் உபாத்தியாயரும் பயப்படுவர். இந்தப்பையன் மற்ற சிறுவர்களையெல்லாம் தன் வசப்படுத்தி அவர்களை அடக்கி ஆள்வான். இவன் சர்வமுட்டாள். நமது கதாநாயகனாகிய மனோகரன் இவர்களுக்கிடையில் படித்துச் சத்விஷயங்களைக் கிரகித்துக்கொண்டு நல்லவனெனப் பெயரெடுத்தான்.

ஓர் நாள் இவன் சென்றபொழுது, மாலை மூன்றுமணி யாதலால் உபாத்தியாயர் தூங்கிக்கொண்டிருந்தார், சட்டாம்பிள்ளையும் அவனைச் சேர்ந்த நாலைந்து மண்டுக்களும் சுண்ணாம்பைக் குழைத்து, உபாத்தியாயரின் முகத்தில் மீசை முதலான வேஷங்கள் பூண்டு அவரது குடுமியில் ஒரு தேங்காயக் குலையைக் கட்டித் தொங்கவிட்டுக் கயிற்றை யிருக்கித் தூணில் கட்டிவிட்டு வெளியே போய் விட்டார்கள். மனோகரன் உபாத்தியாயரை எழுப்பச் சென்றான்.

ஆனால் சட்டாம்பிள்ளையோ அவனைத் தாடையில் ஓங்கியோர் அறை கொடுத்தான். அவன் சிறுவனானதால் மிகவும் திகிலடைந்து வீறிட்டுக் கதறிக்கொண்டே கீழே விழுந்தான். உபாத்தியாயர் விழித்துக் கொண்டார். அதற்குள்ளேயே சட்டாம்பிள்ளை ஓடிவிட்டான், அவர் விழித்து எழுந்திருக்க முயன்றார். ஆனால் குடுமி கீழே இழுத்தது. முகத்தைத் துடைத்தார் கையை சுண்ணாம்பு அலங்கரித்தது. தேங்காயை அவிழ்த்துவிட்டு எழுந்திருந்தார், கயறு பின்னிழுத்தது. இத்தகைய சங்கடங்களை விலக்கிக்கொண்டு எழுந்திருந்து வருவதற்குள் பையன் மூர்ச்சைபோய் விட்டான். பிறகு ஒரு வீட்டினுள் சென்று தண்ணீர் வாங்கிவந்து அவனைக்களையிலிருந்து நீக்கி விசாரித்தார். சமாச்சாரத்தை நடந்தது நடந்தபடி கூறினான். அதற்குள் சட்டாம்பிள்ளையுடன் சிறுவர்களெல்லாம் வந்துவிட்டார்கள். சட்டாம்பிள்ளை இவன் சொல்வதைக் கவனித்து ஒரு பார்வை பார்த்தான், இவன் ஏற்கனவே அடிபட்ட பயத்தாலும், உபாத்தியாயர் கஷ்டப்பட்ட பயத்தாலும் மிகவும் திகிலடைந்தார்கள். இதுநிற்க, உபாத்தியாயர் சட்டாம்பிள்ளையைத் தவிர்த்து மற்றவர்களை அடிக்கப் போனார். குச்சியோ ஓங்குவதற்குமுன் ஒடிந்து விட்டது மிகவும் கோபித்தவராய் அவர்களைக் கொக்குப்பிடிக்கச் சொன்னார். இத்தகைய கஷ்டங்களை மனோகரனும் அனுபவித்து வரநேரிட்டது யாரிட்டசாபமோ? என்ன கஷ்டமடைந்த போதிலும் பொய்புகலமாட்டான் இதுவே அவனை மேன்மைப் படுத்தியது. நித்யபிரமசாரியாதலால் அவனுக்கு ஒரு நாளைக்கு ஒரு வீட்டில் சாப்பாடுபோடுவார்கள். அதற்கு இவர் அவர்கள் சொல்லும் வேலைகளெல்லாம் செய்வது வழக்கம். உதாரணமாக ஓர்நாள் நடந்த சம்பாஷணையைச்சிறிதிங்கு கூறுவோம்.

லக்ஷ்மி:—(இடையிற்குடத்துடன்) வாத்தியாரே! வாத்தியாரே!!

உபாத்:— ஏனம்மா! என்னையாகூப்பிட்டீர்.

லக்ஷ்:—ஆமாங்காணும்,உம்மைத்தான்! உம்மைவிடவேறேனக்கு ஆரிருக்கா. அந்தப்பாழாபோர கட்டேலபோர கிட்டு பள்ளிக்கூடம்பள்ளிக்கூடமென கோலிவிளையாடப்போயுடறான். அவாளோ வயலுக்குப் போயிட்டா! குழந்தையோ சிறிசு. அழறது நான் ஒத்தியா என்ன பண்ணறது. நாழியோ பத்தாச்சு. காவேரிக்குப் போரேன். உமக்கு சுருக்க சமைக்கணும். பாவம் பசிதாங்கமாட்டீர். சுருக்கப்போய் குழந்தையைப் பார்த்துக்கும்.

உபாத்:—நீ போ நான் செத்த நாழிக்கெல்லாம் போரேன்.

லக்ஷ்:—ஏங்காணும் குழந்தைஅழும் எங்கிரேன். பள்ளிக்கூடமாவது, எழவு புண்டம் வேணுமானு உடனே போம்.

உபா:— அப்படியே! (பள்ளியை சட்டாம்பிள்ளையிடம் ஒப்புவித்துத் தான் போனார்.)

மங்களம்:—ஏது இன்னைக்கு அதுக்குள்ளேயே பள்ளிக்கூடத்தைவிட்டு வந்துட்டேள்? பசிச்சுதோ?

உபா:—இல்லை! லக்ஷ்மி குழந்தையைப் பார்த்துக்கச்சொன்னு வந்தேன்.

மங்க:—அப்படின்னு இங்க வாருங்கணம். உம்மத்தான் கூப்பிடலாமென்னப்பார்த்தேன். குட்டிக்கப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல் வந்துட்டீர். ஆத்துலே ஒத்திருமில்லெ.* நீர்தான் சாமுவுக்கு நாலுமாசமா பாடம் சொல்லிக் கொடுத்தேள். ஒன்னும் வரல்லை. அதுக்காக நான் எங்க அக்காளாத்துக்கு அனுப்பிச்சுட்டேன். அவங்கூட இல்லை. இங்கே வாருமே! கபத்தைக் காணோம், மாடுகறக்கணும்; செத்த கன்னுக்குட்டியே பிடிச்சுக்கும் சுருக்க கரந்துடறேன் அப்பறம் அவாத்துக்குப் போகலாம்.

உபாத்:—அப்படியே, (இங்கே கன்றைப் பிடித்துக்கொண்டபின் குழந்தையைப் பார்த்துக்கொள்ளச் சென்றார்.)

கௌரி:—வாத்தியாரே! ஓய் வாத்தியாரே! ஒம்மத்தாங்கணும்! என்ன காது செவிடா! கூப்படறேன்! கேக்காதுபோல போகறீரே.

உபா:—இல்லை குழந்தைஅழும் பாத்துட்டு வந்துடறேன்.

கௌ:—கட்டை பிரும்மசாரிக்கு குழந்தையாமே! என்ன ஆச்சரியமடி! (குலுங்கச்சிரிக்கிறாள்.)

உபா:—இல்லையம்மா—லக்ஷ்மி குழந்தையைப் பார்த்துக்கச்சொன்னு காவிரிக்குப்போனா.

கௌ:—அது கிடக்கட்டும் இங்கே வாருமே! ஆத்துக்காரர் வெளியே போனா, சுருக்கசமைக்கணும், அரிசியில்லே செத்தப்போய் வாங்கிக்கொடுத்துப்போனீர்னா புண்ணியமுண்டு, அவா வந்தா முன்னயே சொல்லறத்துக்கென்னனு அடிப்பா செத்தப்போங்கணும்.

உபா:—(சிறுவயசான படியால் புத்திமயங்கி) அப்படியே எனப்பணத்தை வாங்கிக்கொண்டு கடைக்குப்போனார். இதற்குள் லக்ஷ்மி, காவேரிலிருந்து வந்துவிட்டாள்.

குழந்தை தூளியிலிருந்து கீழே விழுந்து காயம்பட்டு கதறிக்கொண்டிருந்தது. அந்த பாழும் பிராமணன்! கட்டேல போறவன்! கழிச்சேலேபோகா! நாங்குழந்தையை மெனக்கட்டு பாத்துக்கச் சொன்னேன் பாத்துக்கல்லை வா! புண்டம் புண்டந்தான்.

ஒருவாத்தியார் எவ்வளவு பெயருக்குத்தான் ஜவாப்சொல்வர்.

(தொடரும்.)

V. Naganathan.

## " சன்மார்க்க கிர்த்தியங்கள். "
(184-ம்பக்கத் தொடர்ச்சி.)

**நேர்மை:**—இத்தகைய குணத்தை, அன்னம் தன் பெடையோடு கூடிக்குலாவக்கூடிய புனல்கள் அமையப்பெற்றுள்ள பொழில்களிலேயும், மந்தமாருதமானது நறுமணங்கமழ்ந்து சுவாசிப்போர்க்கு ஓர் விதமான குதுகலத்தையும், இன்பத்தையும், அளித்து ஓடிஉலாவுதற்குரிய மரம், செடி, புல், பூண்டுகள் உண்டாயிருக்கும் பூங்காவனங்களிலேயும், நிலவளம் நீர்வளம் செழிப்பு வளம்பொருந்திய பற்பல இடங்களிலேயும் முளைத்தெழும்பி வர்ண்ணனது கடாக்ஷத்தால், துளிர்விட்டு, தன் பருவமடைந்தவுடன் புஷ்பிக்கும் ஓர் ரோஜா புஷ்பத்திற்குச்சமானமாகக்கொள்ளுதல் தகுதியே. இவ்வியாசத்தைத் தங்களது திருக்கண்களால் கண்ணுற்று வாசிப்போர் நேர்மையென்னும் குணத்தை ரோஜாமலருக்கு உவமித்தல் எவ்வாறு? என்று கேட்கக்கூடும். அதன் காரணமென்னவெனில் அம்மலரானது பார்ப்போர் மனதையும், கண்களையும் ஒருங்கே கவர்ந்து தங்கள் மனத்திடத்திலேயே ஜெனித்துள்ள இன்னல்களை யோட்டி, ஆனந்த பரவசத்தையூட்டி, இரவை ஆளும் மதியினெழிலையப்பழித்து மல்லிகை, முல்லை, இருவாட்சி, மரிக்கொழுந்து, சண்பகம், புன்னாகம், பாரிஜாதம், பாதிரி, மந்தாரம், முதலிய புஷ்பஜாதிகளெல்லாம் எவ்விதத்திலும் தனக்கு ஈடல்லவென ஒப்புயர்வற்று ஓங்கி விளங்குவதுபோல, நேர்மையானது தன்னைக் கைக்கொள்ளும் ஒவ்வொரு ஆன்மாவுக்கும் சந்தோஷத்தைக்கொடுத்து சமாதானத்தை அளித்து, மகிழ்ச்சியைநிலைநாட்டி, விண்ணுலகைக் காட்டி, மோட்சத்தைக்கூட்டி வைப்பதுபற்றியேதான்.

நேர்மை யென்னும் பதத்திற்கு எக்காரியத்திலும் எக்காலத்திலும் நேராகயிருத்தல் என்று பொருள்கூறுவதுமுறையே. ஓர் மனிதனுக்கு தனது முதுகெலும்பு எவ்வாறு தன் அமைப்பின் முக்கிய சாதனமாக விளங்குகின்றதோ, அவ்வாறே நேர்மை அவனது குணாதிசயங்களுக்கும் நடக்கைக்கும் முக்கிய ஏதுவாக இருக்கின்றது.

முதலாவதாக, தனது மார்க்கவிஷயத்தில் உண்மையோடிருக்கக் கற்றுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறு இருக்காவிடின் தனது ஜெபத்தின் பயனென்ன? தவத்தின் பிரயோஜனமென்ன? மன்றாட்டின் முடிவென்ன? யோகத்தின் பலாபலன்களென்ன? எல்லாம் அவனுக்கு ஹீனமாகவே முடியும். அப்படி முடியும் பட்சத்தில், அவன் என்ன பரிதாபமான நிலைமையை அடைவானென்று யோசித்துப்பாருங்கள். கடவுளுடைய பாதாரவிந்தத்தை யடைவானோ !!! ஒரு பொழுதும் அடையவேமாட்டான். பின்னால் மறு உலகத்தில் அவன் என்னகதி அடைவான்!! அளவிடமுடியாது!

இரண்டாவதாக, ஒருவன் தன் மேலோர்க்கும் மாதா பிதாக்களுக்கும், தனது நேயர்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் தான்

நேர்மையுடையோனென்று காட்டாவிடின், அவனது செய்கை நடத்தைகளினாலாவதென்ன? ஒன்றுமில்லையே, அதனுடன் முதலாவது வகுப்பாரால் கீழ்ப்படியாமையென்னும் குற்றத்திற்காளாகி, பொய்காரனென்னும் பெயர்பெற்று, "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் சத்திபத்திற்கு விலகி, "தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக" என்னும் வேதவாக்கியத்திற்கு மாறாக நடந்து சகோதர அன்பெனும் பாசத்தை அறுத்தவனுமாகிறான். இன்னும் சூது, வஞ்சகம், களவு, கபடுமுதலிய துர்நடக்கைகளுக்கு இருப்பிடம் கொடுத்து, தன்னை மற்றோர் கண்களில் அவமானப்படுத்திக்கொள்ளுகிறான். லஜ்ஜையடைகிறான். இவைகளையெல்லாம் நன்குணர்ந்தறிந்து நேர்மையைக் கையடாமலிருக்கும் மக்களிற் பெரியோருமுண்டோ? நேர்மை இவ்வுலகில் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வோர் சமயத்திலும் அத்தியாவசியமானதே அதில்லாவிடின் எப்பேர்க்கொத்த காரியமும் பலனற்றுப்போவது கண்கூடாக (பிரத்யட்சமாக) கண்ணாடியில்தனது பிரதிபிம்பம் எவ்வாறு விளங்கி நிற்கின்றதோ, அவ்வண்ணமே ஜொலிக்கின்றது.

மூன்றாவதாக, பணவிஷயத்தில் நேர்மையானது எத்தகுதியுடையதென ஆலோசித்துப்பாருங்கள். இவ்விஷயத்தில் தான் நம்போன்ற வாலிபர்கள் மிகவும் எளிதாக சோதிக்கப்படுகிறார்கள். "பணமென்றால் பிணமும் வாயைப்பிளக்கும்" என்னும் ஆன்றோர் மூதுரை இச்சமயத்திற்கே ஏற்றதாகயிருக்கிறது. நாம்நமது இந்துதேச சரித்திரத்தின் மூலமாக முற்காலத்தில் சுதேச ராஜாக்கள் ஆளுகை செய்யும்பொழுது சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு சம்பளம் மிகவும் குறைவாகயிருந்ததுபற்றியும், அது சரியான காலத்தில் செலுத்தப்படாதிருந்தமையாலும் எல்லோரும் பிறரிடமிருந்து லஞ்சம்வாங்க நேர்ந்தார்களென்று அறிந்திருக்கிறோம். அப்படிச்செய்ததை யார்தான் சரியென்று நியாயமெடுத்துக்காட்டி பிரஸ்தாபிக்கக்கூடும்? "லஞ்சம் ஒருவனுடைய இருகண்களையும் கெடுத்துப்போகிறது" என்று ஆங்கிலேய சான்றோர் உரைத்திருக்கிறார். அக்காலத்தில்தான் அப்படிச் செய்தார்களென்றாலோ இப்பொழுது அதைப்பார்க்கிலும் பதின்மடங்காய் லஞ்சம்வாங்குகிறார்கள். ஜெகத்தில் கிருபையோங்கி புகழையும் கீர்த்தியையும் நிலைநிறுத்தி மானிடர்களுக்கெல்லாம் எல்லாவிதத்திலும் நன்மை புகட்டி, இப்பெரிய ராஜ்ஜியத்தைக் கைப்பற்றி மகா நீதியோடு அரசாட்சி செய்துவரும் ஆங்கிலேய ஆளுகையில் என்னகுறையிருக்கின்றது? அவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தருக்கும் மற்றும் இதரவேலை செய்பவருக்கும் அவரவர் உழைப்புக்கும் ஜீவியத்திற்கும் தக்கதாய் யாதொரு காலதாமதமன்னியில் தத்தம் சம்பளத்தைக்கொடுத்து வருங்கால் லஞ்சம் வாங்கவேண்டியதின்நிமித்தமென்ன? அதைச்சற்று நினைக்குங்கால், நெஞ்சினில் எறிவேல் பாய்ந்ததுபோல் ஆறாத்துயரத்தை விளைவிக்கின்றது. தற்காலம் பண்டயகாலத்தில் பாவி

ருந்த லஞ்சம்வாங்கும் தன்மையானது சற்றுகுறைவாகக் காணப்படுகிறதென்று கேட்குங்கால், நமக்கு அளவிறந்த உற்சாகத்தை விளைவிக்கிறதென்பதற்கு ஐயமுண்டோ? இப்பேர்ப்பட்ட நிலைமையை நம் இந்தியா தேசமானது பெற்றிருக்கிறது நமது தவப்பயனோ? நமது முன்னோர்கள் பூஜாபலனோ? அல்லது பகவானது கடாட்சதீக்ஷ வீக்ஷணியமோ? நாம் அறியேம். ஆகையால் எவ்விதத்திலும் லஞ்சம் வாங்குவதை நிறுத்துதல் முறையே.

நான்காவதாக, நமது பிரமாண்டதேசத்தில் இன்னுமோர் பெரிய தீக்குணம் பரவியிருக்கிறது. அஃதென்னவெனில் கடன் வாங்குவதே நம்முள் ஆயிரக்கணக்கான ஜனங்கள் கடன்கொடுப்போரிடம் சற்று முன் பின் யோசியாது அதிதீவிரமாய் ஓடி கடனைவாங்கி, மேகமண்டலத்தினின்று தோன்றும் மின்னலொளியானது எவ்வளவு சீக்கிரத்தில் மறைந்துபோகின்றதோ, அவ்வளவு சீக்கிரமாய் தான் வாங்கின பணத்தை வீண் ஆடம்பரங்களில் செலவுசெய்துவிட்டு தனது ஜீவியத்திற்குக்கூட ஒன்றுமில்லாது பரிதபித்துப்புலம்பிநின்று இறுதியில் தனது கடன்காரனுக்கு கொடுக்க வழியற்று தாமரை இலையில் தண்ணீர்த்துளி ததும்பியதுபோல் தயங்கிநின்று அவர்களால் விதிக்கப்படும் ஆக்கினைக்குள்ளாகிறார்கள் என்னும் விஷயத்தை கண்ணுறும் பொழுது நமக்குண்டாகும் துக்கத்தை யார்தான் அளவிடக்கூடும்? இப்படியெல்லாமிருக்க கடன் வாங்குதலை கைக்கொள்ளுதல் தகுதியோ? அநேகர் தமது பெற்றோர்கள் சேகரித்து வைத்திருந்த தனத்தையெல்லாம் டம்படமாகச்செலவழித்து, பின்னால்தாங்களுறும் கஷ்டத்தை நாம்கவனிக்கும்பொழுது மட்டற்றவருத்தத்தை உண்டாக்குகிறது. "கடனில்லாச் சோறு கால்வயிறு போதும்" என்ற பழமொழிக்கொப்ப நடவாதிருக்கும் மானிடர் எத்தகையராவர்? எந்த மனிதனுக்கும் ஒன்றும் கடன்படாதே கடனென்னும் நதியைவிட்டு விலகியே நடவதே உத்தமம். கடன் வாங்குகிறவன் பொதுவாக பொய்யனென்றே கொள்ளப்படுகிறான். ஏனெனில் தனது வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற முடியாமலும் தனது மனதில் வஞ்சகமென்னும் பயிரை விளைவிக்கச் செய்கிறதினாலுமே. கடன்வாங்கிக்கொண்டிருக்கிறவன் எப்பொழுதும்துக்கத்தையுடையவனாயிருக்கிறான். மேலும் ஒரு வேடனால் துரத்தப்பட்டுவருண்டு ஓடுகிற ஒருமானுக்குச்சமானமாகிறான். கடன்காரனுக்கு எப்பொழுது தன்னைக்கண்டுபிடித்து தனதுகடனைக்கொடுஎன்றுகேட்கிறானோ என்ற அச்சமானது தனது மனதில் வேரூன்றியிருக்கிறது. ஆகையால் இவ்விதமான கஷ்ட நஷ்டங்கள் உண்டாவதாலும் துக்கம் மேலிடுவதினாலும் தனது குணமானது இவைகளினால் தீட்டுப்படுத்தப் படுவதனாலும் கடன்வாங்கும் செயலைவிட்டு வேடனைக்கண்ட பட்சியானது எவ்விதமாக விரைந்து பறந்து செல்கின்றதோ அவ்விதமாக பறந்து செல்வது உத்தமம்.

George Rethnasamy.
S. P. G. College, Trichy.

(தொடரும்.)

# ஓர் ஆகாயப் பிரயாணி.

நான் ஒரு ஆகாய விமானமிடுகிறவன். என் பெயர் ராபர்ட் (Robert). நான் பற்பலதேசங்களைச்சுற்றிக்கொண்டு சென்னைமாநகரிற்கு 1911-வருடம் மே-மாதம் 11-தேதி வியாழக்கிழமை யன்று வந்து சேர்ந்தேன். அவ்விடத்தில் மறுநாள் மாலை 5 மணிக்கு நான் அந்நகரவாசியாகிய (David) டேவிட் துரையுடன் ஆகாயவிமானம் புரிவதாக விளம்பரஞ்செய்தவாறு (பீபில்ஸ்பார்க்கில்)ஜனங்கள் திரள் திரளாகக் கூடியிருந்தார்கள்.

மூர்மார்க்கெட் மணிக்கூண்டு டிங், டிங், என 5 அடித்தது விமானத்திற்குப்புகை ஏற்றினேன். ஜனங்கள் எப்பொழுது கூண்டு உயரப்போகுமென அதி அவாக்கொண்டிருந்தார்கள். கூண்டு தயாராகி விட்டது, ஆனால் டேவிட் துரையோ வரவில்லை. ஜனங்கள் தாமதமாகிறதென்று சிலர் கைதட்டினர். மற்றுஞ் சிலர் நகைத்தனர். பலர் பலவாறாக டேவிட் ஏன் வரவில்லை என யோசித்தனர்.

ஐரோப்பியனாகிய எனக்கு அவைகளைப்பார்க்க மனஞ்சகியாமல் உடனே தனிமையாக யாத்திரை செய்வதாக எண்ணினேன். அத்தருணத்தில் புதரினின்று வெளிவந்த பாம்பைப்போல திடீரென்று என்முன் ஒருவர் குதித்து டேவிட் துரைக்கு பதிலாகத்தான் யாத்திரைத்தோழனாக இருப்பேனென்றார். உடனே நாங்களிருவரும் புகைக்கூட்டின் கீழ் பாகத்திலுள்ள நாற்காலிகளில் அமர்ந்தோம். ஜனங்கள் கலகலவெனக் கைத்தட்டினார்கள். மறு நிமிஷமே மரங்களையும், கட்டிடங்களையும் கடந்து உயரச்சென்றோமானாலும் அதி உயரம்போகாது சமீபத்தில்போய் இறங்குவதாக எண்ணினேன். ஆனால் என் தோழனோ கொஞ்சமேனும் மனமஞ்சாது சந்தோஷத்துடன் சற்று உயரம் இன்னும் சற்று உயரம் போவோமென்றார்.

நாம் மேலே போவதற்குப் பின். வாங்கலாகாது, அவர் போதும் போதும் என்று சொல்லும்படியாகக் கூட்டை வேகமாக விடவேண்டுமென நினைத்து, உடனே கனத்திற்காக வைத்திருந்த இரண்டு சிறியமணற்சாக்குகளை எடுத்தெறிந்தேன். இவர் இன்னும் பாக்கியுள்ளவைகளையும் எறியச் சொன்னார். ஆனால் நான் அவ்வாறுசெய்யாது மயிலாப்பூர் தெரிகிறது பார், இதோ ஹார்பர் தெரிகிறது பார், அதோ லயிட்ஹவுஸ் தெரிகிறது பார், என்றேன். ஆனால் என் தோழன் சற்று முகம் வாடினாற்போல் தன்னை யாரேனும் பார்த்து விடுவார்களா என்றார். பார்க்கமுடியாதென்றேன். அதைக்கேளாது இன்னும்உயரம் உயரம் என்றார். நான் அதிகஉயரம்போக அஞ்சினேனாதலால், என்னகாரணமய்யா! ஏன் இன்னும் உயரம் போகவேண்டும்? காற்றோ கடல்புறமாகவீசுகிறது பொழுதோ போய்க்கொண்டிருக்கிறது, இனி அதிக உயரம் போகலாமா என்றேன். ஆனால்அவர்என்வார்த்தைகளுக்குச்செவிகொடாது இன்னுமுயரம் இன்னுமுயரமென்று தன் குல்லாவையும்

கோட்டையும் கழற்றி வீசி எறிந்து ஹூரா, ஹூரா, உயரம் உயரமென்றார். நான் இதென்ன மூடத்தனம் உன்னையாரும் தூரதிருஷ்டிக்கண்ணாடியினாற்கூடப்பார்க்கமுடியாதே நீரேன் இந்தமாதிரி செய்கிறீரென்றேன்.

(தோழன்) அவ்வாறு சொல்லாதீர், அவர்கள் கூர்மையான கண்ணையுடையவர்கள்.

(நான்) யாரையா அவர்கள்?

(தோழன்) வெறியன் ஆஸ்பத்திரிக்காரர்கள்.

ஓ தெய்வமே! இப்போதன்றோ உண்மை வெளியானது கூட்டின் பலவீனமான பாகத்தில் வீற்றிருக்கின்றேனே, குறைந்தது பூமியினின்று ஒரு மைல் உயரமிருக்கின்றனவே சற்று அசைந்தாலும் இருவரும் தலைகீழாகச் சமுத்திரத்தில் விழவேண்டுமே எனக் கடவுளைப் பிரார்த்தித்தேன். இதற்கிடையில் வெறியன் உயரம் உயரம் என மற்றுமுள்ள ஆடைகளைக் கழற்றி எறிந்து நாம் இன்னும் பத்தாயிரம் மைல் உயரம் வரவில்லை, நம்மில் ஒருவன் மற்றொருவனைக்கீழே தள்ள வேண்டுமென்றான். இவைகளைக் கேட்ட மாத்திரத்தில் பேச நாவெழவில்லை பதைத்து நடுநடுங்கினேன். துக்கித்தேன். கண்ணீர் விட்டேன். இவனோடு இந்நிலைமையில் இருக்கிறதைப் பார்க்கினும் கடும்புலி வாழும் காடுநன்றே என நினைத்தேன். ஆனால் வெறியனோ உயரம் உயரம் என்று கூத்தாடுகிறான். கூண்டோ வாயுவேகமான வேகமாகப் போகிறது. பூமியோ கண்களுக்கு மறைந்துவிட்டது

(வெறியன்) ஓய் என்ன பேசாதிருக்கிறீர், வாரும் சீட்டுவிளையாடலாம், இதோ சீட்டுக்கட்டு கொண்டுவந்திருக்கிறேன்.

(நான்) பதில் பேசவில்லை.

(வெறியன்) ஏய்! என்னபேசாமல் இருக்கிறாய் உனக்கு பெண்ஜாதி பிள்ளைகளுண்டோ?

(நான்) ஆம் ஐயா உண்டு.

(வெறியன்) உறுதிப்பேசும், எத்தனை மனைவி உனக்கு.

(நான்) ஐயா எனக்கு இரண்டு மனைவி ஏழுகுழந்தைகள்.

வெறியன் ஆ, ஆ, ஆ, அடே எனக்கு எத்தனை மனைவிகள் தெரியுமா? 500 மனைவிகள், 3000 குழந்தைகள், இருக்கிறார்கள். இருவர் கனத்தினாலல்லவோ கூண்டு மெதுவாய்ப் போகிறது இல்லாவிடின் முன்னமே நான் அவர்களைப் போய்ச் சேர்ந்திருப்பேன்.

அவர்கள் எங்கே ஐயா இருக்கிறார்கள்?

(வெறியன்) அடை அவர்கள் சந்திரனிடத்தில் இருக்கிறார்கள் சீக்கிரமாகக்கூட்டை விடு.

இதென்ன வேடிக்கை அங்கே போகவாவது, என்று முணவினேன்.

(வெறியன்) அடேமூடா என்னமுணவுகிறாய் இனிஏதேனும் வார்த்தைபேசினால் தெரியுமா? இதோ கத்தியைப்பார் என்று கத்தியினால்.

J, S. நரசிம்மலு.

# பெற்றோர் பீதியை நீக்கிய பெண்மணி.

இதை வாசிக்கும் சகோதர சகோதரிகளே நான் எழுதப்புகுந்தது ஒரு கர்நாடககதையே இது பயனற்றதென்றாகிலும் நவீன நடை தழுவாதிருக்கிறதென்றாகிலும் அசட்டை செய்யாதிருக்கவேண்டுகின்றேன். இதுவும் ஆழ்ந்து நோக்குவோர்க்கு அருமையாகவே காணும் என்னுந் துணிபுபற்றி எழுதுகின்றேன் இனிக்கதைவருமாறு.

நமதுநாட்டில் முன்னிருந்த ஒருசெல்வவான் தனக்கு ஒரு பெண்ணைத்தெரிந்து கல்யாணஞ்செய்துகொள்ள விரும்பி ஒரு வண்டி நிரம்பப்பொன்னையும் ஒருவண்டி நிரம்பப் பிரம்பையும் ஏற்றிக்கொண்டு பல ஊர் பல கிராமங்கள்தோறுஞ் சென்று ஒரு வண்டி பொன்னுக்கு ஒரு பெண் கொடுப்பாருண்டோவெனக் கூவிக்கொண்டு சென்றான். பொருள்மேல் விருப்புடைய பலர் வந்து நான் தருகின்றேன் நான் தருகின்றேனென்றனர். அதற்கு அந்தப்பிரபு நான் ஒரு பெண்ணுக்கு ஒரு வண்டி பொன் தருகின்றது உண்மையே ஆனால் அதற்குச் சமீபத்தில் உள்ள வண்டியில் இருப்பது என்னவென்று தெரிகின்றதா? என்றுகேட்டான். அதற்கு அவர்கள் தெரியாதா அது பிரப்பு என்றனர். இதுவும் நான் ஏன் கொண்டு வந்திருக்கின்றேனென்றால் என் பேரில் பின் குறை சொல்லாதிருக்கும்படி என் எண்ணத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று தான் அதென்னவென்றால் ஒரு வண்டி பொன்கொடுத்து வாங்கிய பெண் என் சொற்படி கேளாதிருப்பின் இவ்வண்டியிலுள்ள பிரம்புகளனைத்தையும் உபயோகப் படுத்துவேன் என்பதைப் பெண்ணைக் கொடுப்போர்க்கு முன்னமே தெரிவித்து விட வேண்டுமென்று தான் என்றான். இதைக் கேட்ட வுடனே பெண் கொடுக்க விரும்பி முன் வந்தவர்கள் அனைவரும் இடி ஓசை கேட்ட நாகங்கள் போல அடங்கி ஒடுங்கிப் பின் சென்றனர். ஒருவரும் பெண் கொடுக்க சம்மதிக்கவில்லை. சிலர் எமன் கையிற்கொடுத்தாலும் கொடுப்போம் இவன் கையிற் கொடோம் என்றனர். சிலர் இவன் பொன்னுக்கு ஆசைப்பட்டு நம் பெண்ணை இக்கொடியனுக்குக் கொடுக்கிறதோ என்றனர். இப்படியே ஒவ்வொருவரும் ஒவ்வொன்று சொல்லித் தம் தம் வீட்டைச் சேர்ந்தார்கள். இவனும் பொன் நிறைந்த வண்டி பிரம்பு நிறைந்த வண்டிகளுடனே பல பல ஊர்கள் சென்று பெண் கிடைக்காமல் கடைசியாக ஒரு ஊர் போய்ச்சேர்ந்தான். அவ்வூரிலுள்ள ஏழைக் குடியைச்சார்ந்த ஒருவன் தன் பெண்ணைக்கொடுத்து பொன்னை வாங்கி தனது வறுமையை நீக்கிக்கொள்ள நினைத்தான் ஆனால் பக்கத்திருந்த வண்டியிலிருக்கும் பிரம்பைக்கண்டு நடுங்கி என் செய்வதென ஏங்கியிருந்தான். தன் மனைவியினிடத்துச் சொன்னான். அவன் மனைவியும் பொன்னுக்கு ஆசைப்பட்டாளானாலும் ஒருவண்டிபிரம்புகொண்டடிக்கும் ஒருவனுக்குத் தன் மகளைக் கொடுக்க விருப்பமில்லாதிருந்தாள் இதை யுணர்ந்த "**கற்பகம்**" என்னும் பெயருடைய அவர்கள் புதல்வி

ஓடிவந்து பெற்றோரைப் பார்த்து பெற்றோரே! ஒரு பிள்ளை பிறந்தால் அப்பிள்ளையால் அப்பெற்றோர்க்குப்புகழும் சுகமும் சேர்தல்வேண்டும் ஒரு பிள்ளை தன் பெற்றோர்க்குச் சுகத்தையும்புகழையும் உண்டாக்கா திருப்பின் என்ன பயன். என்னைப் பெற்ற நீங்கள் புகழுஞ் சுகமும் அடையக்கண்டிலேன், நான் ஆண்பிள்ளையாகப் பிறந்தால் உங்களுக்கு என்னால் கூடிய மட்டும் புகழும் பொருளும் சேரும்படிக்கும் நீங்கள் யாதொரு கவலையுமின்றி சுகமாக இருக்கவும் செய்திருப்பேன். பெண்ணாய்ப் பிறந்த நான் என்ன செய்யக்கூடும். ஆனால் இந்தக் கவலை எனக்கு சிறு குழந்தைப் பருவத்திருந்தே தோன்றி என் மனதை வருத்திக்கொண்டிருந்தது ஆனால் இப்போது எனக்கு நீங்குவதற்கு ஒரு வழி ஏற்பட்டிருக்கின்றது நீங்கள் சிறிதும் கவலைப்படாமல் அந்தப்பிரபு கொண்டுவந்திருக்கும் ஒரு வண்டி பொன்னைப் பெற்றுக் கொண்டு என்னைக் கொடுத்துவிடுங்கள் உங்கள் நித்திய தரித்திரம் நீங்கிவிடும் சுகமாக இருக்கலாம். நான் பிறந்து என்னாற் செய்யக்கூடிய இந்த நல்ல உதவியைச் செய்யத் தவறலாமா? என் விதிப்படி நடக்கும் என்று பற்பல சொல்லிப் பெற்றோரைத் தேற்றுவித்து அவர்களையும் சம்மதிக்கச்செய்தனள்.

அவர்களும் பொருள் மேல் வைத்தவிருப்பால் மகள் சொல்லிய வாறே ஒருவண்டிபொன்னைப் பெற்றுக்கொண்டு தம்பெண்ணையனுப்பி வைத்தனர் பெண்ணைக்கூட்டிக்கொண்டு அவ்வாலிபப்பிரபு சென்றான் அவர்களுக்குப்பின்னால் பிரம்பும் வண்டியிற்சென்றது கற்பகம் இக்காளைபின் சென்றவனைக் கல்லியாணம் செய்து கொண்டாள். புருஷன் அவளிடத்தில் பிரம்புகொண்டுவந்த நோக்கத்தைச்சொல்லி நீ எனக்கு அதிர்ப்தி வரும்படி நடந்தால் இப்பிரம்புகளுக்கு வேலை ஏற்படும் என்றுசொல்லி ஒரு பரணின்மேல் போட்டுவைத்தான். கற்பகமோ தன் புத்திசாதுர்யத்தினால் 'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாண்டி' என்றபடி தன் புருஷனின் குணமறிந்து அவனுக்குத் திருப்தி வரும்படி நடந்துகொண்டாள். பரணின்மேல்போட்ட பிரம்போ நாள்செல்லச்செல்ல உளுத்துத் தூள் தூளாகக் கீழ் விழுந்துகொண்டிருந்தது.

இது இப்படியிருக்கக் கற்பகத்தைப்பெற்றோர் பொன்மேல்வைத்த ஆசையால் தன்கண்போலிருந்த பெண்ணைக்கொடுத்தாராயினும் கவலை அவர்களை வருத்திற்று. போய்க் கண்டு வரலாமென்றாலோ அவள் அவனிடம் கஷ்டப்பட்டால் அதை எப்படிக் கண்டுசகிப்பதென்று ஏங்கியிருந்தனர். தங்கள் பெண் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டே யிருப்பாள் என்ற எண்ணத்தால் தாயாகிலும் தகப்பனாகிலும் போய்க்காண விரும்பவில்லை. பிறகு நெடுநாள் சென்றபின் மனந்துணிந்து தமது பெண்ணைப்பார்த்து வருவோமென்று தாயும் தந்தையும் புறப்பட்டு புருஷன் இல்லாதநேரம்பார்த்து அவள் வீட்டிற்சென்று மகளைக்கண்டு கட்டிக்கொண்டு அழுதார்கள். மகள் அவர்களை நோக்கி நீங்கள் ஏன் அழு

கிறீர்கள் நான் சுகமாக இருக்கின்றேன்" எனக்கொருகுறையுமில்லை என்றாள். அதற்கு அவர்கள் ஒரு வண்டி பிரம்பாலும் அடித்திருப்பானே என்றார்கள். அதற்கவள் நகைத்து என்னை நீங்கள் அறியீர்களா உங்கள் வயிற்றில் பெண்ணாய்ப் பிறந்து புருஷன் பிரியப்படி நடந்து நல்லவள் என்று பெயர் எடுக்காமற்போனால் என்னைப் பெற்றதனால் உங்களுக்கென்னபயன் என்றுசொல்லி அவர்களை மகிழ்வித்தாள். பெற்றோரும் ஆனந்தபாஷ்பஞ்சொரிய தம்பெண்ணைக்கட்டித்தழுவி முத்தமிட்டு ஆசீர்வதித்தார்கள். பெண்களாலேயே பெற்றகுடியும் புகுந்த குடியும் சிறப்படையும் என்பது இதனாலறியக்கிடக்கின்றது.

A. C. Vedanayagam,
S. P. G, High School, Trichinopoly.

## விநோதக் கூற்று.

ஒருவன் ஒரு வாழைத்தோப்பில் திருட்டுத்தனமாய்க் குதித்து ஒரு வாழைத் தாரைத்திருடிக்கொண்டு ஏறினான். இது கண்டசேவகர்கள் அவனைப்பிடித்து அக்கால வழக்கப்படி ஒரு கயிற்றில் கோர்த்து அவன் கழுத்தில் கட்டி, அவனை முன்விட்டு பின்னே சேவகர்கள் "தமுக்கு" அடித்துக்கொண்டு வாழைத்தார் திருடினவன் வருகிறான் என்று கத்திக்கொண்டு சென்றனர். அப்பையன் தன் வீடு கிட்டினதும் அதி துரிதமாய் இரண்டு சீப்பைப் பிய்த்து, வீட்டுக்குள் எறிந்தான் இதைப்பார்த்த ஜனங்கள் "ஏண்டா கேடுகாலம்" என்று கேட்க அவன் "உங்களுக்கு வாழைக்காய் பச்சியின் ருசி என்ன தெரியும். அதற்காக வல்லவா திருடினேன்" என்று மிக்க சாதுரியமாய்ச்சொன்னான்.

ஒரு கலாசாலையில் உபாத்தியாயர்களையும் மாணாக்கர்களையும் பரீட்சைசெய்ய ஒரு இன்ஸ்பெக்டர் வந்திருந்தார். அப்படிபரீட்சைசெய்துகொண்டு வரும்பொழுது ஒரு வகுப்பிற்குள் புகுந்தார் அவ்வேளையில்அவ்வகுப்பில்"பொதுப்பாடம்" அல்லது"General Study" நடந்து கொண்டிருந்தது. இன்ஸ்பெக்டர் ஒரு பையனைப் பார்த்து உலகத்தில் எத்தனை கற்கள் இருக்கின்றன? என்று கேட்டார். பையன் எழுந்து சற்றேனும் தாமதியாமல் ஒன்பது கற்கள் உண்டு என்றுரைத்தான். மறுபடியும் இன்ஸ்பெக்டர் பையனைப்பார்த்து அவைகளை வரிசையாய்ச்சொல்லு என்றார். அதற்குப்பையன் சறேலென்று வழுக்கல், சறுக்கல், வாங்கல், கொடுக்கல், பக்கல், விக்கல், கருக்கல் வெளுக்கல், சுக்கல் என்று சொல்லிமுடித்தான். இன்ஸ்பெக்டர் பையனின் புத்தி சாதுரியத்தை மெச்சிக் கொண்டனராம்.

## டர்பார் கொண்டாட்டம்.

திரிசிரபுரத்தில் மார்க்கட்டின் மேல்பால் ஒரு பெரும் பந்தலிட்டு அலங்கரித்து டிசம்பர் 12ந் தேதி திரிசிரபுரத்தாரனைவரும் கூடினார்கள். கலெக்டர் துரையவர்களும் மற்றும் அனேக துரை மக்களும் பன்னியர் சகிதமாய்வந்து வெகு விமரிசையாய் நடத்தினார்கள். கொட்டகையின் உள்ளும் புறம்புமாகப் பதினையாயிரம் ஜனங்களுக்குமேற் கூடியிருந்தார்கள். இதல்லாமல் லட்சக் கணக்கான ஜனங்கள் இருக்க இடம் பெறாமல் சுற்றுள்ள நாலு வீதிகளிலும் சுற்றிக்கொண்டிருந்தார்கள். சமீபத்துள்ள கடைகளிலும் மெத்தைகளிலும் சுவர்களிலும் மரங்களிலும் நின்றோர் தொகை கணக்கிடமுடியாது. பார்ப்பவர்க்கு உலகமே திரண்டு வந்ததுபோற் றோன்றிற்றேயல்லாமல் வேறல்ல. சுற்றுப் புறங்களிலுள்ள கிராமத்தாரெல்லாம் வந்தீண்டியிருந்தனர். பந்தல் இவ்வளவு பேருக்கும் இடந்தராத குறையேயன்றி வேறு குறையேயில்லை. எமது திரிசிரபுரத்தாரின் ராஜவிசுவாசம் எவ்வளவென்பதை அன்று கண்டவரறியாதிரார். மரியாதைக்குண்டுகள் அண்டங்கிழிய வெடித்தன. மங்கல வாத்தியங்கள் எண்டிக்குஞ் செவிபட அதிர்ந்தன. மங்கல வாழ்த்துக் கவிகளைப் பல பாஷையிலும் வல்ல வித்துவான்கள் பாடி மகிழ்வித்தனர். ஆங்கிலப் போர் வீரரும் இந்திய போர் வீரரும் வாச்சிய முழக்க வந்திருந்தனர். அன்று மாலை மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியின் படத்தையும் சக்ரவர்த்தினியின் படத்தையும் மிகச் சிறப்பாக அலங்கரித்த யானைமேல் அம்பாரியில் வைத்து நகரத்தை முழுதும் வலம்வந்தனர். வாண வேடிக்கையும் விளக்கலங்காரமும் மலைமேல் நடந்தது. திரிசிரபுரம் பொன்னுலகம் போலவும் கோடிசூரியப்பிரகாச உலகம்போலவும் விளங்கிற்று.

## இராஜ விசுவாசமும் S. P. G. கலாசாலையும்.

இந்தக் கலாசாலை சம்பந்தப்பட்ட பல பாடசாலை 'ஹாஸ்டல்' முதலிய இடங்களில்வல்ல ஆசிரியர்களால் பிரசங்கங்கள் செய்யப்பட்டன. கலாசாலைக் கட்டிட முழுதும் தீபங்களாலலங்கரிக்கப்பட்டு விளங்கிற்று. இக்கலாசாலைப் புலவர்கள் பந்தலில் நடந்த கூட்டத்தில் தமிழ், சம்ஸ்கிருத முதலிய பாஷைகளில் வாழ்த்துப் பாட்டுகள் பாடினர்.

இக்கலாசாலை இந்துஸ்தானிப் புலவராகிய ஸ்ரீமான் சியாவுடீன் சய்யுட் மகமது சாகப் அவர்கள் பாரசி அராபிப்பாஷைகளில் பாக்கள்பாடிச் சபையை ஆனந்தப் படுத்தினார்.

ஹைஸ்கூல் மாணவர் "The Two gentlemen of Verona" வெரோனா தேயத்து இரண்டு பிரபுக்கள் என்னும் ஷேக்ஸ்பியர் நாடகக் கதையை ஆங்கிலத்தில் கோட்டை ரயில்வே கிளப்பில் மிக விமரிசையாகவும் சாமர்த்தியமாகவும் (Dec.) டிசம்பர பதின்மூன்றாந் தேதி இரவு $8\frac{1}{2}$ மணிமுதல் $11\frac{1}{2}$ மணிவரை நடித்துக்காட்டினர். அன்று வந்து கண்ட ஐரோப்பிய துரைமார்களும் துரை பன்னியரும் சுதேசப் பிரபுக்களும் பெருமாட்டிகளும் வியந்து கொண்டாடினர். இதன்றிப் பல விளையாட்டுகளும் மற்றைக் கொண்டாட்டங்களும் குறைவறக் கொண்டாடப்பட்டன.

மாட்சிமைதங்கிய சக்ரவர்த்தி சக்ரவர்த்தினி ஆகிய இவர்களுடைய படங்களை வாத்தியகோஷத்தோடு ஊர்வலஞ்செய்வித்தனர். சிற்றுண்டி மிட்டாய் முதலியன மாணாக்கர்களுக்கு அளித்தனர்.

உறையூர் "Young mens Union" யங் மென்ஸ் யூனியன் சங்கத்தார் இராஜ விசுவாசத்தைக் காட்டிய விதம் மிகக் கொண்டாடத்தக்கதே. இராஜ விசுவாசத்தைப்பற்றி எழுதிய தமிழ் ஆங்கில வியாசதாரிகளுள் முதலில் நின்றவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்கள் கொடுத்தனர்.

விளையாட்டுகளில் (Sports) சாமர்த்தியமுள்ளவர்களுக்குப் பரிசளித்தனர். பிரசங்கங்கள் பாட்டுக் கச்சேரிகள் முதலியன நடத்தினர். ஸ்ரீமான் யரங்காச்சாரி அவர்கள் 500 பெயருக்கும், ஸ்ரீமான் நரசிம்மாச்சாரியர் அவர்கள் 400 பெயருக்கும் சபை சம்பந்தமாக இராஜ விசுவாசத்தைக் காட்டும் பொருட்டு அன்னம் அளித்தனர்.

இராஜ தம்பதிகளின் திருவுருவங்களை வாத்திய கோஷத்தோடு ஊர்வலஞ் செய்வித்தனர். இச்சங்கத்தாரும் இவர் இராஜ விசுவாசமும் என்றும் நீடித்துப் புகழோடுவாழ்க. உறையூரிலும் சீரங்கத்திலும் மற்றுமுள்ள இடங்களிலும மிகுந்த பணச்செலவு செய்து மிகவிமரிசையாகக் கொண்டாடினார்கள். திரிசிரபுரத்துப்பலபலஇடங்களிலும் அன்னதானமும்வஸ்திரதானமும் கோடிக்கணக்கான ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது.

காலஞ்சென்ற ஸ்ரீமான் பாண்டித்துரை தேவர்:— ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் அவர்களை யறியாதார் இல்லை. தமிழ்மகள் சிறப்புற்றோங்கத் தமிழ்ச்சங்கம் ஸ்தாபித்துப்புலவர்களுக்கு ஒரு பெருந்துணையாயிருந்த இவர் காலஞ்சென்றமை கேட்டு மிக விசனிக்கின்றோம். இவர் சரிதமும் இவர் சிறப்பும் அடுத்த மாத சஞ்சிகையில் வரும். இவரை இழந்தது தமிழகத்துக்கோர் பெருங்குறையே,

ஒரு யந்திரம்:—கடிதங்களைத் திறப்பதற்கு ஒரு யந்திரம் கண்டுபிடித்திருக்கிறார்களாம்.

குதிரையின் பிடரி மயிர்:—அமெரிக்காவில் கலிபோர்னியா மகாணத்திலுள்ள மிஸ்டர் ஜில்திட் என்பவரிடத்திலிருக்கும் குதிரைக்கு பதினெட்டடி நீளமுடைய பிடரிமயிரிருக்கிறதாம்.

மரத்தாலமைக்கப்பட்ட நாடகசாலை:— இங்கிலாந்திலே நாடகசாலை மரத்தாலமைக்கப்பட்டிருக்கிறது. இதில் நீராவித்திரைகள் உண்டாம் வெளிச்சத்திற்கு காலாயிரம் விளக்குகள் இருக்கின்றனவாம.

குடியாற் கொலை செய்த குடிகேடி:—சேலத்தில் மன்றைக்காள் என்பவன் குடித்து விட்டுக் கணவனோடு கலகஞ்செய்து தனது நாலு மாதக் குழந்தையைக் கழுத்தைத் திருகி முறித்துப்போட்டு நாயகன்மேல் பழியைச் சுமத்துகிறாளாம்.

மாமிசச் செடி:—அமெரிக்கா தேசத்தில் ஓர் விதமான செடி யிருக்கின்றது. அதன் இலைகளின் மத்தியில் மாமிசத்துண்டை வைத்தால் உடனே மூடிக்கொள்ளுகின்றன. சிறிது நேரத்திற்குப் பிறகு திறந்து பார்த்தால் மாமிசத்துண்டு காணப்படுவதில்லையாம.

ஒரு நவீன நூதனப் பெட்டி:—நகைகளையும் மற்றும் பொருட்களையும் பத்திரப்படுத்துவதற்காக ஒரு புதுவகைப் பெட்டியொன்று ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதை யாராவது எடுத்தால் நாய் போல் குலைக்கின்றதாம். அச்சத்தத்தை நிறுத்தவேண்டுமானால் அதின் சொந்தக்காரர் வந்து உள்ளிருக்கும் யந்திரத்தை யமர்த்திவிடவேண்டுமாம்.

நாயின் அறிவு:—லண்டன் பட்டணத்திலுள்ள ஓர் வீதியில் ஒரு குழந்தை விளையாடிக்கொண்டிருந்தது. அச்சமயத்தில் மிக தீவிரமாக ஒரு குதிரைவண்டி வந்தது. அங்கு நின்ற ஒரு நாய் திடீரெனப் பாய்ந்து குழந்தையை ஆபத்தினின்றும் நீக்கிற்று, சில நிமிஷம் தாமதித்திருந்தால் பிள்ளை பரலோகமே சென்றிருக்கும. இதைக்கண்டிருந்த ஒருசீமாட்டி அந்நாய்க்கு வெள்ளியினால் கழுத்தாபரணம் போட்டனளாம.



பண்டிதர் K. S. கிருஷ்ணசாமி ஐயருடைய 'எலக்டிரிக்பாம்' என்னும் சூலினிவாரணித் தைலம், இத்தைலத்தை மேலுக்கு தேய்ப்பதினால் வாதரோகம், முழங்கால் வீக்கம், இடுப்புநோய், பிடிப்பு, பக்கநோய், தலைவலி, ஒற்றைத்தலைவலி, மண்டையிடி, பல்வீர் வீக்கம், தொண்டை கம்மல், இருமல், மார்சளி, ஜலதோஷம், இசிவு, சுளுக்கு, தேள் கொட்டு முதலிய விஷக்கடி முதலிய வியாதிகளையும் குழந்தைகளுக்கு காணுகிற மாந்த யிழுப்பு முதலியவைகளையும் அதிசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தும் ஓர் சிறந்த தைலம்.

விலை புட்டி 1-க்கு 0—12—0.

ஏஜண்டுகள், P. கணேசரத்னம் பிள்ளை
கடைத்தெரு 86 நெ. கடை, சேலம் & சர்மா & கோ,
திருச்சிராப்பள்ளி தெப்பக்குளம்.

இவ்விடங்களில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

---

# A VALUABLE ASSET FOR VACANCY SEEKERS.

## THE NATIONAL TYPE-WRITING INSTITUTION.

**Sanjeevi Row's lane [Near Little Market]**

*TRICHINOPOLY.*

**Imparts instructions in:—**

| | |
|---|---|
| Type-writing | Book-keeping and |
| Shorthand | Commercial correspondence. |

STUDENTS ARE COACHED UP BY SPECIALISTS AND PROFESSIONAL MEN HOLDING FIRST CLASS CERTIFICATES.

*Games:*—Special arrangements are made for games such as Badminton and Foot-Ball.

Scholarships are awarded to students passing their Examinations with distinction.

*For particulars apply to:—*

**Mr. V. N. Barathy.**
*Manager.*

வீரிய விருத்திக்கும் இழந்த பலத்தையும் நரம்புபலத்துவத்தையும்
திரும்ப அடைவதற்கும் உபயுக்தமான
இரண்டு உயர்ந்த ஔஷதங்கள்.

# மதன மஞ்சரி மாத்திரைகள்.

" நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும்,
ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் உபயோகமானவை."

1. இவை, ஜீரண சம்மந்தமான கோளாறுகளைப் பரிகரித்து நல்ல பசியை உண்டாக்குவன.

2. இரத்தத்தை சுத்திகரித்து விருத்தி செய்து தேகத்திற்கு நல்ல திருடத்தையும் மேனியையுங்கொடுப்பவை.

3. உடம்பில் ஏற்பட்ட எவ்விதநரம்புத்தளர்ச்சியையும் நிவர்த்தித்து நரம்பு ஸ்தானங்களுக்குப் பலத்துவத்தை அளிக்கத்தக்கவை.

4. கை, கால், கண், எரிச்சலைப் போக்கடித்து மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விசேஷித்துத் தருப்வை.

5. ஸ்திரீகளுக்குண்டாகும் கர்ப்பப்பை சம்பந்தமான சகலவித துன்பங்களையும் நிவர்த்திப்பவை.

etc. etc.

40-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

## தபும்வைகத்வாரி கிருத்.

இக்காலத்தில் சாதாரணமாக வாலிபர்களுக்கு சகவாஸ தோஷத்தால் ஏற்படும் துராப்பியாசங்களால் உண்டாகும் ஜன்மேந்திரிய நரம்புத்தளர்சசிக்கும் ஆண்தன்மைக்குறைவிற்கும் கைகண்ட ஔஷதம்.

2-தோலா கொண்ட டப்பியின் விலை ரூ. 1.

எங்கள் ஔஷதங்களையும், அவற்றின் ஆச்சரிய முண்டுபண்ணத்தக்க குணங்களையும் குறித்து, அவ்வௌஷதங்களை உபயோகித்து சௌக்கியம் பெற்றவர்களில் மகாராஜாக்கள், ராஜாக்கள், ராஜகுமாரர்கள், மந்திரிகள், ஜமீந்தார்கள், அமீர்கள் முதலானோர்கள். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப்பத்திரங்கள் நாங்கள் கேடாமலும், கேளாமலும் அனுப்பி யிருக்கிறார்கள்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும் ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, முதலிய எந்தப் பாஷையில்வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனமாக தபால் செலவுகூட இல்லாமல் அனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

## ராஜவைத்திய நாராயண்ஜீ கேசவஜீ.

புரொப்ரைடர் ஆயுர்வேதோதய ஔஷதாலயா

No. 177, சைனாபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.

**கன்றுக்குப் பால் விடாது கறத்தல்:**—சென்னையிலே கன்றுக்குப் பால் விடாது கறந்த பாற்காரனொருவனுக்கு நீதிஸ்தலத்தில் பத்து ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டிருக்கிறது.

**ஒருமகிமை:**—பரம்பக்குடிக்குச் சமீபத்திலுள்ள கஞ்சியேந்தலிலே. ஒரு சாதுவாகிய மகாத்துமா, ஒரு யந்திரஸ்தாபனஞ்செய்து அதன்மேல் ஒரு கல்லை நட்டு இங்கே அற்புத சக்தி சாந்நித்தியமாகி விளங்கும் என்றருளிப் போயினராம். மூன்று மாதங்களுக்குள்ளே அதன் மகிமை எங்கும் பரவி அநேக ஜனங்கள் அங்கே தரிசித்து இஷ்ட பூர்த்தியை யடைந்து வருகின்றார்களாம். தீராத வியாதிகளும் தீருகின்றனவாம். மகம்மதியரும், கிறிஸ்தவர்களும், இன்னும் மற்றவர்களும் சாதிபேதமின்றி பூசித்துச் செல்கின்றனர்.

**தனது சிலை:**—ஜப்பானிலே தன்னைப்போல மரத்தினாலே ஒரு உருவத்தை ஜானன் உம்மானசி என்னும் சிற்பி செய்திருக்கிறார். சிலைக்கும் இவர்க்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கப்படவில்லையாம்.

## ஐந்தாவது ஜார்ஜ் மன்னர் இந்தியாவிற்கு வந்து பட்டஞ்சூட்டிய அறிகுறியாக இந்தியாவிற்கு செய்த நலங்கள்.

1. கலகத்துக்குக் காரணமாயிருந்த பெங்கால் பிரிவைநீக்கி முன்போலவே ஒன்றாயாக்கினர்.

2. டெல்லி இந்தியாவிற்குப் பிரதான நகரமாயிற்று.

3. பிரைமெரி படிப்பை ஸ்ரீமான் கோக்கலே யவர்களின் விருப்பப்படி இலவசப் படிப்பாக ஆக்கிவிட்டனர். இதற்காக 50-இலட்சம் ரூபாய் பண்டாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

4. சிவில் மிலிட்டேரி உத்தியோகஸ்தர்களில் 50ரூபா சம்பளத்திற்கு உட்பட்டவர்களுக்கு டிசம்பர் மாதத்தில் ½ மாதச் சம்பளம் கூட்டிக்கொடுக்கும்படி உத்தரவு கிடைத்திருக்கிறது.

5. மகாமகோ உபாத்தியாயர் என்னும் பட்டம்பெறுவோர்க்கு அவர் காலத்திற்குப் பின்னும் அவர் குடும்பத்திற்கு உபகாரச்சம்பளம் கொடுக்கப்படும் என்னும் அருமை ஏற்பாடும் ஏற்பட்டுள்ளது.

6. சுதேச அரசர்கள் பட்டம் அடையுங் காலத்து பிரிட்டிஷ் ராஜாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய "Succession Fee" சக்ஸஷன் பீ என்னும் பணம் நிறுத்தப்பட்டது.

திரிசிரபுரம் டவுன் 5-வது வார்டுக்கு மகா-ள-ள-ஸ்ரீ **T. S.** சாமிநாதபிள்ளை அவர்களுக்கு கவுன்சிலர் வேலை கிடைத்தது கேட்டு மிகச் சந்தோஷமடைகின்றோம். இதற்கு ஏற்பட்டவர் மூவர் அதில் ஒருவர்க்கு 36 ஓட்டும், மற்றொருவர்க்கு 48ஓட்டும், கிடைத்தனவாம் நமது சாமிநாதபிள்ளை அவர்களுக்கு 123 ஓட்டுகள் கிடைத்தனவாம். இதனாலேயே இவர் குணமுஞ் சிறப்பும் விளங்கும். இவர் ஜனங்களின் பொதுநலங் கருதி மிக உழைப்பர் என்று நினைக்கின்றோம்.

உண்மையுரைப்போன்.

இந்திய சக்ரவர்த்தியாகிய மாக்ஷிமைதங்கிய

# 5-ம் ஜார்ஜ் அவர்களுக்கு.

டில்லியில் நடந்தபட்டாபிஷேக மகோற்சவத்தைத்
திரிசிரபுரவாசிகள் கொண்டாடியபோது
இராஜபுரம் தமிழ்ப்பண்டிதர் கு. ஐயாக்கண்ணு
முதலியார்பாடிய "பட்டாபிஷேகநோட்டு"

---

பல்லவி. மன்னனைந்தாஞ் சார்ஜு
மகு டாபி ஷேகம் ... ... ... மன்

அ. பல்லவி. கன்னியாரி மேரி
கற் ப கத் தோடு ... ... மன்

சரணம். (1) இங்கிலாந்தினரசர் இந்தியசக்ரவர்த்தி
மங்கைராணிமேரி மாரன்ரதிபோல் ... ... மன்

(2) சென்னைபம்பாய்கல்கத்தா தேசவாசராஜர்கள்
பின்னும்பார்லிமெண்டுள்ள பெரியோருடன் ... மன்

(3) சக்ரவர்த்திவர்த்தினி தகுபட்டஞ்சூட்ட
உக்ரசேனாதிபதி யுறவோரொடு ... ... மன்

(4) நூறில்லிரண்டாயிரம் நவல்பன்றொன்றில்
ஆறிரண்டாமதியி லாம்பன்னிரண்டில் ... ... மன்

(5) தொல்லுலகிற்பேர்பெற்ற சொல்லும்டில்லிநகரில்
அல்லுமெல்லாக்கரி யாசனத்தினில் ... ... மன்

(6) தங்கநவரத்ந தகதக முடியை
எங்குங்கீர்த்திபொங்க எடுத்திட்டனர் ... ... மன்

(7) மங்கள திரிசிரநகரில் மட்டில்லாதஜனங்கள்
அங்கம்பரவசமாகி யானந்தங்கொண்டார். ... ... மன்

மங்களம். மங்களம் சுப மங்களம் மகேசுரதேவற்கு ... ... மங்
மங்கைராணிமேரிக்கும் மன்னனைந்தாஞ்சார்ஜுக்கும்
எங்குமுள்ளராஜர்க்கும் எல்லாவுயிருக்கும் ... ... மங்